உங்களது அனைத்து வெற்றிகள் மற்றும் ஈடேற்றத்திற்கான தலையூற்று திருக்குர்ஆனில் உள்ளது பக்கம் 3

இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்) (தொடர்-4) பக்கம் 8

பராஹீனே அஹ்மதிய்யா (தொகுதி 1, 2) (தொடர்-4) பக்கம் 14

மஜ்லிஸே ஷூரா யு.கே மற்றும் கனடா பக்கம் 19

மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | January 2026 | Vol. 5 - Issue No. 2

Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311

Baitun Nur Mosque
Calgary, Alberta
Canada





# திருக்குர்ஆன்

اَقِمِ الصَّلٰوةَ لِدُلُوْكِ الشَّمْسِ اِلٰى غَسَقِ
الَّيْلِ وَقُرْاٰنَ الْفَجْرِ ؕ اِنَّ قُرْاٰنَ الْفَجْرِ
كَانَ مَشْهُوْدًا
وَمِنَ الَّيْلِ فَتَهَجَّدْ بِهٖ نَافِلَةً لَّكَ ۖ عَسٰٓى
اَنْ يَّبْعَثَكَ رَبُّكَ مَقَامًا مَّحْمُوْدًا

சூரியன் சாய்ந்த(நேரத்)திலிருந்து இரவில் நன்றாக இருட்டி விடும் (நேரம்) வரைப் (பல்வேறு நேரங்களின்) தொழுகையினை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்று -வீராக. அதிகாலையில் (குர்ஆன்) ஓதுவதையும் (கட்டாயமாக்கிக் கொள்வீராக). அதிகாலையில் குர்ஆன் ஓதுவது (அல்லாஹ்விடத்தில்) நிச்சயமாக ஏற்றுக் கொள்ளப்படும் (ஒரு) செயலாகும்.

மேலும் இரவிலும் நீர் இந்தக் குர்ஆனைத் தஹஜ்ஜுது தொழுகையில் ஓதுவ)தற்காகச் சிறிது துயில் கொண்டதன் பின்னர் விழித்துக் கொள்வீராக. இது உமக்கு அதிகப் படியான ஒரு வெகுமதியாகும். இதனால் உம்முடைய இறைவன் உம்மைப் புகழுக்குரிய இடத்திற்கு உயர்த்தக் கூடும். (17:78,80)



# ஹதீஸ்

عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ «الْقُرْآنُ مُشَفَّعٌ ❋
وَمَا حِلٌ مُصَدَّقٌ مَنْ جَعَلَهُ إِمَامَهُ قَادَهُ
إِلَى الْجَنَّةِ وَمَنْ جَعَلَهُ خَلْفَ ظَهْرِهِ
سَاقَهُ إِلَى النَّارِ»

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

திருக்குர்ஆன் சிபாரிசு செய்யக்கூடியதும் ஒரு சாட்சியும் ஆகும். எவர் அதனை வழிகாட்டியாக்கிக் கொள்கிறாரோ அது அவரை சொர்க்கத்திற்கு இட்டுச் செல்லும். எவர் அதனை முதுகுக்குப் பின்னால் வைத்துக் கொள்கிறாரோ அவரை அது நரகிற்கு இட்டுச் செல்லும்.

(இப்னு ஹிபான் 124)

# உங்களுடைய அனைத்து வெற்றிகள் மற்றும் ஈடேற்றத்திற்கான தலையூற்று திருக்குர்ஆனில் உள்ளது



**ஹாஃபிஸ் சய்யித் ரஸூல் நியாஸ் சாஹிப் (முரப்பி நஷ்ரோ இஷாஅத் காதியான்)**

**தமிழாக்கம்: இப்னு வஸீம்**

قُرۡاٰنًا عَرَبِیًّا غَیۡرَ ذِیۡ عِوَجٍ لَّعَلَّهُمۡ یَتَّقُوۡنَ

பொருள்: அவர்கள் இறையச்சமுள்ளவர்களாகத் திகழ, தன் கருத்தைத் தெளிவாக விளக்கக் கூடியதாகவும் கோணலற்றதாகவும் இந்தக் குர்ஆனை நாம் இறக்கினோம். (39:29)

இந்தத் திருமறையின் மூலமாகவே முடிவில்லாத வாழ்வு கிடைக்கும். (இந்தத்) தூய திருமறையே வாழ்விற்கான நீராகும். (கலாமே மஹ்மூத் - 46)

இஸ்லாம் மட்டுமே தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு வெற்றிக்கான நற்செய்தியை வழங்கிய ஒரே மார்க்கமாகும். மற்ற மார்க்கங்களோ ஈடேற்றத்தையே, அதாவது, ஏதோ பௌதிக வாழ்வில் இருந்து விடுபடுவதையே தங்களது குறிக்கோளாகக் கூறுகின்றன.

திருக்குர்ஆன் (ஃபலாஹ் எனப்படும்) வெற்றி பெறுதலை சில இடங்களில் சுவனத்தைப் பெறுதலாகவும், இறைதிருப்தியாகவும் எடுத்துக் கூறியுள்ளது என்றால், இன்னும் சில இடங்களில் அதை வேதனை தரும் தண்டனையிலிருந்து ஈடேற்றம் பெறுதல் அல்லது இழப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளுதல் என்று கூறியுள்ளது. வெற்றி மற்றும் ஈடேற்றத்திற்குத் திருக்குர்ஆனில் பல இடங்களில் ஃபலாஹ் எனும் சொல் வந்துள்ளது. அது மறுமையில் நிலையான, நிரந்தரமான வெற்றிக்கும், இம்மையில் அமைதியான, நிறைவான வாழ்வுக்கும் பொருந்துகிறது. சுருக்கமாக் கூறினால், திருக்குர்ஆன் வெற்றியை (அதாவது, உலக மற்றும் மறுமையின் வெற்றி மற்றும் ஈடேற்றத்தை) அனைத்து நிபந்தனைகளுடன் மிகவும் தெளிவாகவும், மனங்கவரும் கோணத்திலும் எடுத்து வைத்துள்ளது. திருக்குர்ஆனைப் படிப்பதன் மூலம், ஈமான், இறையச்சம், இறைவனின் வழிகாட்டல்களைப் பின்பற்றுதல், உள்ளத்தைத் தூய்மைப்படுத்துதல் மற்றும் உண்மை மார்க்கம் மேலோங்குவதற்காக ஒன்றாக இணைந்து கடும் முயற்சி மேற்கொள்தல் ஆகியவற்றை செய்பவர்களே வெற்றி அடைவார்கள் என்பது தெரிய வருகிறது. திருக்குர்ஆனின் அனைத்துக் கட்டளைகளையும் கடைப்பிடிப்பதே வெற்றி மற்றும் ஈடேற்றத்திற்குக் காரணியாகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "நீங்கள் விழிப்புடன் இருங்கள். இறைவனின் போதனைக்கும், திருக்குர்ஆனின் நேர்வழிக்கும் எதிராக ஒரு அடி கூட எடுத்து வைக்காதீர்கள். திருக்குர்ஆனின் 700 கட்டளைகளில் ஒரு சிறிய கட்டளையையும் தவிர்க்கும் நபர், தன் கைகளாலேயே ஈடேற்றத்திற்கான வாயிலைத் தனக்கு அடைத்துக் கொள்கிறார் என்று நான் உங்களுக்கு உண்மையாகவே கூறுகிறேன். உண்மையான மற்றும் முழுமையான ஈடேற்றத்திற்கான வழிகளைத் திருக்குர்ஆனே திறந்துள்ளது; மற்ற அனைத்தும் அதன் நிழல்களாகவே இருந்தன. எனவே, நீங்கள் திருக்குர்ஆனை ஆழ்ந்து சிந்தித்து ஓதுங்கள். அதன் மீது பேரன்பு கொள்ளுங்கள். நீங்கள் வேறெதன் மீதும் கொள்ளாத அளவிலான அன்பாக அது இருக்க வேண்டும். ஏனெனில், இது குறித்து இறைவன் என்னிடம் கூறியுள்ளான்: اَلْخَيْرُ كُلُّهٗ فِي الْقُرْاٰنِ அதாவது, அனைத்து விதமான நன்மைகளும் திருக்குர்ஆனில் உள்ளன.

இதுதான் உண்மை. அதனைக் காட்டிலும் வேறு ஒன்றுக்கு முன்னுரிமை கொடுக்கும் மக்கள் மீது வருத்தமே! உங்களுடைய அனைத்து வெற்றிகள் மற்றும் ஈடேற்றத்தின் தலையூற்று திருக்குர்ஆனில் உள்ளது. திருக்குர்ஆனில் காணப் பெறாத, உங்களுடைய எந்தவொரு மார்க்கத் தேவையும் இல்லை. கியாமத் நாளில் உங்கள் ஈமானுக்கு சான்று அளிப்பதாக அல்லது பொய்ப்பிப்பதாக திருக்குர்ஆனே இருக்கும். திருக்குர்ஆனால் உங்களுக்கு நேரடியாக நேர்வழியை வழங்க முடிவதுபோல், திருக்குர்ஆனைத் தவிர்த்து வானத்தின் கீழ் வேறெந்த நூலும் வழங்க முடியாது. இறைவன் உங்களுக்குத் திருக்குர்ஆன் போன்றதொரு மறையை அருளியதன் மூலம் உங்கள் மீது பேருள் புரிந்துள்ளான்..... எனவே, உங்களுக்கு வழங்கப்பட்ட இந்த அருட்கொடைக்கு மதிப்பளித்திடுங்கள். இது மிகவும் அன்பான

அருட்கொடை ஆகும். இது பெரிய செல்வம் ஆகும். திருக்குர்ஆன் வராமல் இருந்திருந்தால், முழு உலகமும் அழுக்கடைந்த ஒரு சதைத் துண்டு போன்று இருந்திருக்கும். திருக்குர்ஆன் எனும் அந்த மறைக்கு எதிரில் பிற அனைத்து நேர்வழிகளும் ஒன்றுமற்றவையே." (கிஷ்தீ நூஹ், ரூஹானீ கஸாயின், தொகுதி 19, பக்கம் 26,27)

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

مَا فَرَّطْنَا فِي الْكِتٰبِ مِنْ شَيْءٍ பொருள்: "நாம் இந்த மறையில் எதனையும் விட்டு வைக்கவில்லை." (அல் அன்ஆம், வசனம் 39)

ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் கண்ணியத்திற்குரிய ஹுஸுர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: திருக்குர்ஆன் ஓதுவதைக் கடைபிடிப்பீராக ஏனெனில், இது இம்மையில் ஒளியாகவும், மறுமையில் சேமிப்பாகவும் உள்ளது. (இப்னு ஹிப்பான், அஸ்ஸஹீஹ்)

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். கண்ணியத்திற்குரிய ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "திருக்குர்ஆன் எத்தகைய பரிந்துரை செய்யக் கூடியது என்றால், அதன் பரிந்துரை ஏற்கப்பட்டுள்ளது... அதனை முன்னால் வைத்துக் கொள்பவரை (அதாவது, அதன் போதனைகள்படி செயல்படு-பவரை, அதன் நேர்வழிகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பவரை, அதனைத் தன் முன்னோடியாக-வும், வழிகாட்டியாகவும் ஆக்கிக் கொள்பவரை) இது சுவனத்தின் பக்கம் இழுத்துச் செல்கிறது அதனைத் தன் முதுகுப் பின்னால் போட்டுவிடுபவரை இது நரகத்தில் தள்ளிவிடுகிறது." (இப்னு ஹிப்பான், ஹாகிம், அல் முஸ்தத்ரக்)



ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ் இந்த மறையின் (திருக்குர்ஆனின்) மூலமாக பல சமுதாயங்களை உயர தூக்குகிறான் (உயர்ந்த நிலையில் வைக்கிறான்) பிற சமுதாயங்களை அதன்(படி செயல்படாததன்) காரணமாக கீழே தள்ளுகிறான்." (ஸஹீஹ் முஸ்லிம், மிஷ்காத்)

எனவே, 'திருக்குர்ஆன்' நேர்வழிக்கான நெறிமுறையும், வெற்றி மற்றும் நற்பேற்றிற்கான அரசியலமைப்பும் ஆகும். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் உயரிய இயல்பில் எவ்வாறு அனைத்து உயரிய பண்புகளும், தனித்துவமும், தனிச்சிறப்புகளும், நற்குணங்களும் ஒன்று சேர்க்கப்-பட்டுள்ளனவோ, அவ்வாறே தெள்ளத்தெளிவான மறையான திருக்குர்ஆனும் நேர்வழியின் தலையூற்றாகும். அதன் போதனைகளின் தாக்கம், அருட்கள் மற்றும் பரக்கத்துகளின் தொடர் முடிவில்லாமல் தொடர்ந்து கொண்டேயிருக்கும். இது எல்லா இல்ஹாமிய ஞானங்களையும் உள்ளடக்கிய மறையாகும். இதில் ஒவ்வொரு காலத்தின் மற்றும் ஒவ்வொரு நேரத்தின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு உள்ளது. இதனைப் பின்பற்றுவது வெற்றிக்கும் ஈடேற்றத்திற்கும் உறுதியான உத்தரவாதமாகும்.

என் இறைவா! இது உனது திருமறையா அல்லது ஓர் உலகமேவா!

தேவையானவை அனைத்தும் இதில் கிடைத்தன!

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

"திருக்குர்ஆன் விண்ணின் சட்டமும், ஈடேற்றத்திற்கான வழிவகையும் ஆகும்." (மல்ஃபூஸாத் தொகுதி 4, பக்கம் 130)

இதற்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்: "திருக்குர்ஆன் விண்ணின் சட்டமாகும். மேலும், இந்த வகையில் ஈடேற்றத்திற்கான வழியாகும். நாம் பார்த்தோமேயானால், உலகச் சட்டமும் கூட, அதை நடைமுறைப்படுத்தும் வரை, அதன்படி செயல்பட வைக்கும் வரை, வெறும் சட்டம் இயற்றப்படுவதனால் மட்டுமே பலனளிப்பதில்லை. இவ்வாறே திருக்குர்ஆனின் சட்டமும் அதன்படி அமல் செய்யப்படும் பொழுது தான் பலனளிக்கவும் செய்யும் ஈடேற்றம் அளிக்கக் கூடியதாகவும் திகழும். அதன்படி அமல் இல்லை என்றால், இது ஈடேற்றத்தை வழங்குவதற்-கான வழிவகையாக ஆக முடியாது. வெறும் படித்து விடுவதனால் மட்டும், அமல் செய்யமால் இருப்பதனால் ஈடேற்றம் கிடைக்க முடியாது. இறைவனின் விருப்பம் கிடைக்க முடியாது. அல்லாஹ்வின் அருட்கொடைகள் மற்றும் பரிசு-களுக்கு நாம் உரிமையாளர்கள் ஆக முடியாது. எனவே, திருக்குர்ஆனின் போதனைகளைப் புரிவது மற்றும் அதன்படி அமல் செய்வது மிகவும் அவசியமானது. (ஜுமுஆ குத்பா 16 டிசம்பர் 2011)

முஸ்லிம்கள் வீழ்ந்தது என்று? திருக்குர்ஆனின் போதனையை மறந்தார்களே அன்று! உண்மை இதுவே!

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: "நம்பிக்கை கொண்டவர்களுக்காக ஃபலாஹ் (வெற்றி) என்ற சொல்லின் பயன்பாடு தெரிவிப்பது என்னவென்றால், முஃமின்களின் அசல் படித்தரம் நஜாத் (ஈடேற்றம்) அடைவது கிடையாது. மாறாக, ஃபலாஹ் (வெற்றி) பெறுவது ஆகும். நஜாத் என்ற சொல்லின் அசல் பொருள் துன்பங்கள் மற்றும் துயரங்களிலிருந்து தப்பித்துக் கொள்வது என்பதாகும். ஐயமின்றி, இது ஒரு சிறப்புதான். எனினும், அதை விடப் பெரிய சிறப்பு, மனிதன் தன் நோக்கத்தை அடைந்து விடுவதுதான்..... இஸ்லாம் நீங்கள் ஈடேற்றம் அடைந்து விடுங்கள் என்று மட்டும் போதிப்பதில்லை. அதையும் தாண்டி, அதை விட உயர்ந்த நோக்கத்தை நம்பிக்கை கொண்டவர்களுக்கு முன்னால் வைக்கிறது. மேலும், நீங்கள் வெற்றி பெற முயற்சி செய்யுங்கள் என்று கூறுகிறது. ஏனென்றால், மனிதன் பகைவன் மீது வெற்றி அடைந்தால், அவன் அவனுடைய தாக்குதலில் இருந்தும் தப்பித்து விடுவான் என்பது கட்டாயமான விஷயமாகும். அல்லது

பசி இல்லாத ஒருவன் பசியின் துன்பத்திலிருந்து தப்பித்திருப்பான்தான். ஆயினும், உடலுக்கு ஆற்றல் சேர்க்கும் உணவை உட்கொண்டவன் பசியிலிருந்தும் தப்பித்திருப்பான். அவன் உடலும் வலிமை பெறும். எனவே, ஃபலாஹ் (வெற்றி) என்பது நஜாத்தையும் (ஈடேற்றத்தையும்) உள்ளடக்கிய ஒரு நிலையாகும். மனிதன் எதற்காகப் படைக்கப்பட்டானோ அந்த நோக்கத்தை அடைந்து விடுவதுதான் ஃபலாஹ் (எனப்படும் வெற்றி) ஆகும். மனிதன் இறைவனின் பண்புகளை வெளிப்படுத்துபவனாக ஆக வேண்டும். மனித இயல்புக்குள் வைக்கப்பட்டுள்ள இறைவனை சந்திப்பதற்கான ஆர்வத்திற்கேற்ப அவன் தன் உண்மையான அன்பனின் நெருக்கத்தைப் பெற வேண்டும் எனும் நோக்கத்திற்காகத்தான் மனிதன் படைக்கப்பட்டுள்ளான் என்பது வெளிப்படை. இந்த நோக்கத்தைத்தான் அல்லாஹ்,

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ

(அஸ் ஸாரியாத், வசனம் 57)

என்ற வசனத்தில் விளக்கியுள்ளான். எனவே, மனிதப் படைப்பின் குறிக்கோளை அடைவதும், அல்லாஹ்வின் திருப்தியை மனிதன் பெற்றுக் கொள்வதும்தான் ஃபலாஹ் (எனப்படும் வெற்றி) ஆகும்.” (த.ஃப்ஸீரே கபீர், தொகுதி 8, பக்கங்கள் 266, 267, 2023 பதிப்பு)

இதிலிருந்து, உண்மையான வெற்றியும், ஈடேற்றமும் திருக்குர்ஆனில் உள்ள இறைகட்டளைகளை உண்மை -யாகப் பின்பற்றுவதையே சார்ந்துள்ளன என்பது தெளிவாகிறது.

ஈமானின் அடிப்படையான ஃபுர்கானைக் கற்றுக் கொடுத்தவன் நீயே!

அதனால் இறைஞானமும் கிடைக்கிறது; ஷைத்தானும் விலகிப் போகிறான்.

வாருங்கள்! இப்பொழுது இந்தக் கண்ணோட்டத்தில் திருக்குர்ஆனின் கட்டளைகள் மற்றும் சிறப்புகள் குறித்து நேரத்தின் அருமையைக் கருத்திற் கொண்டு ஒரு மேலோட்டமான பார்வையை செலுத்துவோம்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அருளுக்குரிய கிலாஃபத் காலத்தில், ஹுஸ்ரு பர்வேஸின் பேரன் யஸ்தஜிர்தின் அரியணை ஏற்றத்திற்குப் பிறகு, ஈராக்கில் முஸ்லிம்களுக்கு எதிராகப் பெரும் அளவில் போர் ஆயத்தங்கள் துவங்கி விட்டன. அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவர்களை எதிர்ப்பதற்காக ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களின் தலைமையில் ஒரு படையை அனுப்பினார்கள். முதலில் ஒரு தூதுக் குழுவை அனுப்பி, ஈரான் அரசனுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுக்குமாறு கூறினார்கள். இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுக்கப்பட்டபோது, யஸ்தஜிர்த் சினங்கொண்டு, “நீங்கள் காட்டுமிராண்டிகளும், செத்த உணவை உட்கொள்ளும் கூட்டமும் ஆவீர்கள். பசியும், வறுமையும் உங்களைத் இந்தத் தாக்குதலுக்குத் தூண்டியிருந்தால், உங்கள் அனைவருக்கும் மனநிறைவுடன் உங்கள் வாழ்வைக் கழிக்கப் போதுமான உணவுப் பொருள்களை வழங்க நான் தயாராக உள்ளேன். அதேபோல், உங்களுக்கு அணிய உடைகளையும் தருவேன்.




நீங்கள் இந்தப் பொருள்களைப் பெற்றுக் கொண்டு உங்கள் நாட்டிற்குத் திரும்பிச் சென்று விடுங்கள். எங்களுடன் போரிட்டு ஏன் வீணாக உங்கள் உயிர்களை இழக்கப் போகிறீர்கள்?” என்று கூறினான். அப்போது இஸ்லாமிய தூதுக் குழுவின் சார்பில் ஹஸ்ரத் முஃகீரா பின் ஸாரா (ரலி) அவர்கள் கூறினார்கள்:

“நீங்கள் எங்களைப் பற்றி விவரித்ததெல்லாம் சரிதான். உண்மையில், நாங்கள் காட்டுமிராண்டிகளாக, செத்த உணவை உட்கொள்ளும் கூட்டமாக இருந்தோம்தான். பாம்புகள், தேள்கள், வெட்டுக்கிளிகள், பல்லிகள் வரை சாப்பிட்டு வந்தோம். ஆனால், அல்லாஹ் எங்கள் மீது அருள் புரிந்தான். அவன் தன் தூதரை எங்களுக்கு நேர்வழி காட்ட அனுப்பினான். நாங்கள் அவர்கள் மீது ஈமான் கொண்டோம் நாங்கள் அவர்கள் வழங்கிய போதனைகள்படி செயல்பட்டோம். இதன் விளைவாக, இப்போது எங்களிடையே ஒரு மாற்றம் உருவாகி விட்டது. நீங்கள் குறிப்பிட்ட அந்த சீர்கேடுகள் இப்பொழுது எங்களிடம் இல்லை. இப்பொழுது நாங்கள் எந்த பேராசையிலும் சிக்கத் தயாராக இல்லை. இப்பொழுது போர்க் களத்திலேயே அதற்கான முடிவு காணப்படும். உலகப் பொருள்கள் மீதான பேராசையால் எங்கள் எண்ணத்திலிருந்து எங்களைத் தடுத்து நிறுத்த இயலாது.”

இதைக் கேட்டதும், யஸ்தஜிர்துக்குக் கடும் கோபம் வந்தது. அவன் ஒரு வேலைக்காரனிடம், “போய் ஒரு மண் மூட்டையை எடுத்து வா” என்றான். மண் மூட்டை வந்ததும், அவன் இஸ்லாமிய தூதுக் குழுவின் தலைவரை முன்னால் அழைத்து, “நீங்கள் என் பரிந்துரையைத் தவிர்த்து விட்டதால், இனி உங்களுக்கு இந்த மண் மூட்டையைத் தவிர வேறெதுவும் கிடைக்காது” என்று சொன்னான். அந்த சஹாபி (ரலி) அவர்கள் மிகவும் நிதானமாக முன்னால் சென்று, முன்னால் குனிந்து, மண் மூட்டையைத் தம் முதுகில் ஏற்றிக் கொண்டார்கள். பின்னர், ஒரு குதி குதித்து, வேகமாக அவனது அவையிலிருந்து புறப்பட்டார்கள். தம் தோழர்களிடம் உரத்த குரலில், “இன்று ஈரான் அரசன் தன் கையாலேயே தன் நாட்டின் மண்ணை நம்மிடம் ஒப்படைத்து விட்டான்” என்று கூறினார்கள். பின்னர், குதிரைகள் மீது ஏறி வேகமாக சென்று விட்டார்கள்.

அரசன் அவர்களின் இந்த முழக்கத்தைக் கேட்டதும், அதிர்ந்து போனான். அவன் தன் அவை உறுப்பினர்களிடம், “ஓடுங்கள்! மண் மூட்டையை அவர்களிடமிருந்து திரும்ப வாங்கி வாருங்கள். இது பெரிய தீய சகுனம் ஆகி விட்டது. நானே என் கையால் என் நாட்டின் மண்ணை அவர்களிடம் ஒப்படைத்து விட்டேன்” என்று கூறினான். ஆனால், அவர்கள் அதற்குள் குதிரைகள் மீது ஏறிப் பெரும் தொலைவு சென்றிருந்தார்கள். ஆயினும், கடைசியில் அவர்கள் கூறியதுதான் நிகழ்ந்தது. சில ஆண்டுகளுக்குள்ளேயே முழு ஈரானும் முஸ்லிம்களின் ஆட்சிக்குக் கீழ் வந்து விட்டது. (முகத்திமா தாரீக் இப்னு ஃஹல்தூன், அஃஹ்பாருல் காதிஸிய்யா, தொகுதி 2, பக்கம் 91,94)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: “இந்த மாபெரும் மாற்றம் முஸ்லிம்களிடையே எப்படி உருவானது? திருக்குர்ஆனின் போதனை அவர்களின் ஒழுக்கங்களிலும், பழக்கவழக்கங்களிலும் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியதனால் உருவானது. அது அவர்களின் தாழ்ந்த வாழ்வுக்கு ஒரு மரணம் அளித்து, அவர்களை உயர்ந்த ஒழுக்கம் மற்றும் மேலான நற்பண்புகளின் (உயர்)மட்டத்தில் கொண்டு வந்து நிறுத்தி விட்டது.” (தஃப்ஸீரே கபீர், தொகுதி 8, பக்கம் 367, 2023 பதிப்பு)

வெற்றி பெறக்கூடிய நம்பிக்கையாளர்களின் பல பண்புகளை உள்ளடக்கிய சூரா அல் முஃமினூன்,

قَدْ أَفْلَحَ الْمُؤْمِنُوْنَ எனும் வசனத்தில் துவங்கி

إِنَّهُ لَا يُفْلِحُ الْكٰفِرُوْنَ எனும் வசனத்தில் முடிகிறது.

வீணானவற்றிலிருந்து தவிர்ந்திருக்கக் கூடிய முஃமின்கள் வெற்றி பெறுபவர்கள் என்பதற்கான விளக்கவுரையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: “முஃமின் நேரத்தை வீணாக்க மாட்டார். சமுதாயத்தின் செல்வம் வீணாகிப் போகும் அளவிற்கு அழகுப் பொருட்களில் செல்வத்தை செலவிட மாட்டார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ‘ஆண்கள் நகைகள் அணியக்கூடாது. பட்டாடை உடுத்தக் கூடாது. தங்கம் மற்றும் வெள்ளிப் பாத்திரங்களைப் பயன்படுத்தக் கூடாது’ என்று கூறியுள்ளார்கள். ஐரோப்பியர்களுக்கு இன்று கிஸ்ரா பேரரசனின் கம்பளம் தங்களுக்குக் கிடைக்கிறது என்று தெரிய வந்தால், அவர்கள் அதற்காக ஒரு கோடி ரூபாய் கூட கொடுத்து விடுவார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால், முஸ்லிம்களைப் பொறுத்தவரை, அதன் மதிப்பு எவ்வளவு குறைவாக இருந்தது என்றால், ஒரு போரின்போது பேரரசன் கிஸ்ரா, ‘முஸ்லிம் அதிகாரிகளை என்னிடம் அழைத்து வாருங்கள். நானே அவர்களுடன் பேச விரும்புகிறேன்’ என்று கூறினான். இதனால் சஹாபாவின் ஒரு தூதுக் குழு அவனிடம் சென்றது. அவர்களின் தலைவர் தம் அழுக்கான காலணிகளுடன் கம்பளத்தின் மீது தமது ஈட்டியால் குத்தியவாறு அவனை சென்றடைந்தார். அரசன் அவரது இந்தச் செயலைக் கண்டு வியந்து, ‘உங்களுக்கு மரியாதையே தெரியவில்லையே’ என்று கூறினான். (தாரீக் இப்னு ஃஹல்தூன், 14 ஹிஜ்ரி, ஸிக்ருல் ஃஹபரி அம்மா ஹிய்யிஜ அம்ருல் காதிஸிய்யா)

ஆனால், உண்மை என்னவென்றால், அவன் அரசனாக இருந்தபோதும் கம்பளத்தை மதித்தான். ஆனால், முஸ்லிம்கள் ஏழைகளாக இருந்தபோதும் இறைவனை மட்டுமே மதித்தார்கள். கிஸ்ராவிடம் இருந்ததன் காரணமாகக் கம்பளம் அவர்களின் பார்வையில் எந்தவொரு மதிப்பையும் கொண்டிருக்கவில்லை. இறைவன் எதை மதிக்கிறானோ, அதனை மட்டுமே அவர்கள் மதித்தார்கள்.” (தஃப்ஸீரே கபீர், தொகுதி 8, பக்கம் 269)

அல்லாஹ் கூறுகிறான்: “ஸகாத்(துக்கான உரிமையை) செலுத்தும் நம்பிக்கை கொண்டவர்கள் வெற்றி பெறுபவர்களாவார்கள். ஏழைகளின் உரிமைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். செல்வந்தர்கள் அவர்களின் முன்னேற்றத்திற்காகவும், வெற்றிக்காகவும், நல்வாழ்வுக்காக -வும் தம் பொருள்களில் ஒரு பகுதியைச் செலவு செய்து கொண்டே இருக்க வேண்டும். இது சமுதாய முன்னேற்றத்திற் -கான ஒரு மிக முக்கியமான அடிப்படையாகும். இவ்வாறு




உலகரீதியிலும் அவர்கள் முன்னேறுவர் ஆன்மிக ரீதியிலும் அல்லாஹ்வின் பரக்கத்துகளையும், அருட்கொடைகளையும் பெறுவர்.” பிறகு, கூறுகிறான்: அவர்கள் தம்மிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றையும், தம் உடன்படிக்கைகளையும் காப்பவர்கள் ஆவார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஃஹைபர் போரில் ஒரு யூதத் தலைவனின் மேய்ப்பாளர் முஸ்லிம் ஆனபோது, நபி பெருமானார் (ஸல்) அவர்கள் அவரிடம் ‘ஆடுகளின் முகத்தை யூதர்களின் கோட்டையின் பக்கம் திருப்பி, அவற்றை அந்தப் பக்கம் ஓட்டி விட்டு விடுவீராக’ என்று கூறினார்கள். இதுதான் மாநபி (ஸல்) அவர்கள் அவருக்கு முதலில் கற்றுத் தந்த பாடம் ஆகும். அவ்வாறே அவர் செய்தபோது, ஆடுகள் கோட்டையின் அருகில் சென்று சேர்ந்தன. அங்கிருந்து கோட்டையில் வாழ்பவர்கள் அவற்றை உள்ளே நுழைத்துக் கொண்டார்கள்.

அமானிதத்தை(ப் பாதுகாத்துத் திருப்பி) ஒப்படைப்பது வெற்றிக்கு உத்தரவாதம் ஆகும். சஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) இதை கடுமையாகக் கடைபிடித்தார்கள். கிறிஸ்தவர்களின் ஒரு மையமான ஹும்ஸ் நகரம் முஸ்லிம்களின் வசமானபோது, கிறிஸ்தவர்களிடமிருந்து இலட்சக்கணக்கில் பணம் வரியாகப் பெறப்பட்டது. ஆனால், போர்த் தந்திரங்களின் கீழ் முஸ்லிம்கள் அந்த நகரத்தைக் காலி செய்ய வேண்டிய நிலை வந்தபோது, அங்கிருந்த பொறுப்பான நபர்களை

அழைத்து, முழு பணத்தையும் திருப்பிக் கொடுத்து விட்டார்கள். மேலும் அவர்களிடம், 'உங்களின் உயிர் மற்றும் பொருள்களைப் பாதுகாப்பதற்காக இந்த வரி பெறப்பட்டது ஆனால், இப்போது நிர்பந்தமான சூழல்களின் காரணமாக நாங்கள் நகரத்தை விட்டுச் செல்கிறோம்' என்று கூறினார்கள். வரலாறு கூறுகிறது, இந்த நிகழ்வு கிறிஸ்தவர்களின் உள்ளங்களில் எவ்வளவு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், முஸ்லிம்களின் படை நகரத்திலிருந்து வெளியேறியபோது, அவர்கள் கூடவே வழியனுப்பச் சென்றனர். அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. மேலும் அவர்கள், 'இறைவன் உங்களை மீண்டும் திரும்பக் கொண்டு வர வேண்டும் உங்களைப் போல நல்ல ஆட்சியாளர்களை நாங்கள் இதுவரை கண்டதில்லை' என்று கூறினார்கள். (ஃபுதூஹுல் புல்தான் லில் பலாதுரி, அம்ரு ஹிம்ஸ் வ யவ்முல் யர்மூக்)

அதேபோல், இஸ்லாம் ஆட்சியையும் அமானிதம் என்று கூறியுள்ளது. வரலாறு கூறுகிறது, முஸ்லிம்கள் இந்த கட்டளைபடியும் மிகவும் கடுமையாக செயல்பட்டார்கள். அல்ப் அர்ஸலானின் மகன் மலிக் ஷாஹ், இமாம் மூஸா ரிழாவின் கப்ருக்கு அருகில் இவ்வாறு துஆ செய்தார்: "என் இறைவா! என் சகோதரர் முஸ்லிம்கள் மீது ஆட்சி செலுத்த என்னைவிட அதிகம் தகுதியானவராக இருந்தால், நீ அவருக்கு வெற்றி அளிப்பாயாக. என் உயிர் மற்றும் என் மகுடத்தை என்னிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்வாயாக. இந்த அமானிதத்தை நான் மிகச் சிறப்பாக நிறைவேற்ற தகுதியானவன் என்றால், பிறகு நீ எனக்கு வெற்றி நல்குவாயாக." (இப்னு ஃஹல்கான், தொகுதி 5, பக்கம் 285)

கிப்பன் மிகவும் பாகுபாடு கொண்ட ஒரு கிறிஸ்தவ வரலாற்றாசிரியர். ஆனால், இந்த நிகழ்வைக் குறித்து அவர் வேறு வழியின்றி இவ்வாறு எழுதுகிறார்: "இந்த முஸ்லிம் இளைஞரான இளவரசரின் இந்தக் கூற்றைக் காட்டிலும் தூய்மையான மற்றும் பரந்த கோட்பாட்டை வரலாற்றின் பக்கங்களில் தேடுவது சாத்தியமற்றது. கிறிஸ்தவத்தின் முதிய முதிய மன்னர்கள்கூட இத்தகைய நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவதில்லை."

பின்னர், உடன்படிக்கையைப் பேணுதல் உள்ளது. மாநபி (ஸல்) அவர்கள் நபித்துவத்திற்கான வாதம் புரிந்த பிறகு, ஹில்ஃபுல் ஃபுஸூலின் உடன்படிக்கையை நினைவூட்டி, ஒருவர் பெருமானார் (ஸல்) அவர்களிடம், அபூஜஹ்லிடமிருந்து பணத்தைத் திருப்பி வாங்கித் தருமாறு கேட்டுக் கொண்டபோது, கடும் ஆபத்துகள் இருந்த போதிலும் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் உடனடியாக எழுந்து, அபூஜஹ்லின் வீட்டை அடைந்து, கதவைத் தட்டினார்கள். அபூஜஹ்ல் கதவு தட்டும் சத்தம் கேட்டு வெளியே வந்தான். மாநபி (ஸல்) அவர்கள், 'நீ இந்த மனிதனிடம் பணம் வாங்கியிருக்கிறாய். அதை உடனடியாகத் திருப்பிக் கொடுத்து விடு' என்று கூறினார்கள். அபூஜஹ்ல் எந்த மறுப்பும் பேசாமல் உள்ளே சென்று, பணத்தைக் கொண்டு வந்து அந்த மனிதனிடம் ஒப்படைத்து விட்டான். பிறகு, ஹுதைபியா சமரச உடன்படிக்கையின் வேளையில், ஸுஹைல் பின் அம்ரின் மகன் அபூஜந்தல் அவர்களை, சஹாபாவின் விருப்பத்திற்கு எதிராக, உடன்படிக்கையின் காரணமாக, பெருமானார் (ஸல்) அவர்கள் திரும்ப அனுப்பினார்கள். இதன் விளைவாக, பயணத்தின்போதே பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் வெளிப்படையான வெற்றிக்கான நற்செய்தியை வழங்கினான். ஒரு அரசாங்கத்தின் தூதுவர் மாநபி (ஸல்) அவர்களின் உடனிருத்தலால் தாக்கமடைந்து இஸ்லாத்தை ஏற்பதாகக் கூறியபோது, மாநபி (ஸல்) அவர்கள், "இது பொருத்தமானது அல்ல. நீங்கள் உங்கள் அரசாங்கத்தின் சார்பில் சிறப்பான ஒரு பதவியில் நியமிக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் இதே நிலைமையில் திரும்பிச் செல்லுங்கள். அங்கே சென்று, உங்கள் உள்ளத்தில், பிறகும் இஸ்லாத்தின் மீது அன்பு நிலைத்திருந்தால், திரும்பி வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறினார்கள். (அபூதாவூத், கிதாபுல் ஜிஹாத், பாப்ஃபில்இமாம் யஸ்தஜன்னுபிஹீ ஃபில் உஹூத்).

சரியாகப் போரின் நடுவில் காஃபிர்கள் ஏமாற்றி ஒரு ஹப்ஷி முஸ்லிமுடன் அமைதி உடன்படிக்கை செய்து, கோட்டையின் வாயில்களைத் திறந்து விட்டனர். முஸ்லிம் கமாண்டர், 'உடன்படிக்கை என்னுடன் நிகழ்ந்திருக்க வேண்டும்' என்று கூறினார். இதனால் கருத்து வேறுபாடு அதிகரித்த போது, இஸ்லாமிய படையின் கமாண்டர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இந்த அனைத்து நிகழ்வுகளையும் எழுதி, 'இப்போது என்ன செய்வது?' என்று கேட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'அல்லாஹ் உடன்படிக்கையைப் பேணுவதற்குப் பெரிய மகிமையையும், முக்கியத்துவத்தை -யும் அளித்துள்ளான். எனவே, நீங்கள் இந்த உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். இரண்டாவது தரப்பினர் தாமாகவே இந்த உடன்படிக்கையை மீறும் வரை, நீங்கள் இந்த உடன்படிக்கையில் நிலைத்திருங்கள்' என்று பதில் அனுப்பினார்கள். (தபரி, தொகுதி 5, பக்கம் 2568)

(தொடரும்...)

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். கண்ணியத்திற்குரிய ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: '

திருக்குர்ஆன் எத்தகைய பரிந்துரை செய்யக் கூடியது என்றால், அதன் பரிந்துரை ஏற்கப்பட்டுள்ளது... அதனை முன்னால் வைத்துக் கொள்பவரை (அதாவது, அதன் போதனைகள்படி செயல்படுபவரை, அதன் நேர்வழிகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பவரை, அதனைத் தன் முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் ஆக்கிக் கொள்பவரை) இது சுவனத்தின் பக்கம் இழுத்துச் செல்கிறது. அதனைத் தன் முதுகுப் பின்னால் போட்டு விடுபவரை இது நரகத்தில் தள்ளி விடுகிறது.'

(இப்னு ஹிப்பான், ஹாகிம், அல் முஸ்தத்ரக்)

# இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்)

## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)



4

✧✧✧ தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A. ✧✧✧

இந்தக் கோழைத்தனமான உள்ளம் கொண்டவரிடம் இருந்து வீரத்தின் வெளிப்பாடும், நாவை நீட்டுவதும், வாய் வீராப்புப் பேசுவதும் இல்லாமல் இருந்திருந்தால், நான் அவருடைய வீணான விஷயங்களை கண்டும் காணாமல் விட்டுவிட்டவனாக நன்மக்களைப் போன்று கடந்து சென்றிருப்பேன். அவரை அம்புகளுக்கு குறியாக்கி இருக்க மாட்டேன். ஆனால் அவர் தானாகவே தனது கைகளால் தனது (முகத்)திரையைக் கிழித்து விட்டார். இப்போது அவருக்கு ஏற்பட்ட துன்பம் அவராலேயே உருவானதாகும். அவர் அசுத்தமான பொய்யைக் கூறினார்; பயப்படவில்லை. இன்னும் கூறுவதென்றால், அவர் ஏமாற்றுதலை கைக்கொண்டார்; பொய்யை உண்மையாகக் காட்ட முயற்சி செய்தார். மேலும் கீழ்த்தரமான பண்பைக் கொண்ட மக்களை எனக்கு எதிராகத் தூண்டினார். மேலும் தான், வழக்கத்திற்கு அப்பாற்பட்ட விஷயங்களைக் காட்டுபவராகவும், அற்புதங்-களைக் காட்டுபவராகவும், திருக்குர்ஆனின் அறிஞராகவும், இறைஞானம் எனும் நீரூற்றிலிருந்து அருந்துபவராகவும், நுட்பமான விஷயங்களையும், நுண்ணிய கருத்துகளையும் அறிவதில் கைதேர்ந்தவராகவும் அவர் தன்னைத்தானே கருதிக் கொண்டார். எனவே அவரது வாதத்தின் உண்மை நிலையை மக்களுக்கு முன்னால் கொண்டு வருவதும், உண்மையை மறைக்கும் அவருடைய பண்பை மக்களுக்கு வெளிப்படுத்துவதும் நம் மீது கடமையாகி விட்டது. ஏனெனில் சோதனையின்றி, உயிரற்றதற்கும், உயிருள்ளதற்கும் இடையில் வித்தியாசப்படுத்தித் தெரிந்து கொள்வது கடினமாகும்.

நான் அவரது நொண்டிக் குதிரையை வலிமையான குதிரைகளின் வடிவத்திலும், அவரது கழுதைகளை அருமையான குதிரைகளின் வடிவத்திலும் வெளிப்படுத்த எனக்கு ஆற்றல் இருக்கிறது. ஆனால் இது போர் செய்வதற்கான சந்தர்ப்பமாகும்; மக்களின் தடுமாற்றங்களில் இருந்து கண்டும் காணாமல் விட்டு விடும் நேரமல்ல. எந்தவோர் ஆணவம் கொண்டவரின் தடுமாற்றங்களைக் கண்டும் காணாமல் விட்டு விடுவதற்கும், குறையை மறைப்பதற்கும் அவர் தகுதியானவர் இல்லை. அவ்வாறே, அறிவு இருக்கிறது என்று வாதம் செய்தவாறு அவர் தன்னைத்தானே கண்ணியத்திற்குரிய ஆலிம்களின் கூட்டத்தைச் சேர்ந்தவராக ஆக்கிக் கொண்டவாறு இந்தப் போட்டியிலிருந்து முகம் திருப்புவதும், இந்த சந்தர்ப்பத்தில் இருந்து கையை இழுத்துக் கொள்வதும் பொருத்தமல்ல. மாறாக, அவரது அறிவு கண்டறியப்பட வேண்டும்; அவரது விளை நிலத்தின் உண்மைத்துவம் அறியப்பட வேண்டும்.

தோல் பதனிடுவதன் மூலம் அலங்கரிக்கப்படுவது போன்று, அவர் சொற்செறிவின் பல்வேறு நிறங்களால் தன்னைத் தானே அலங்கரித்திருக்கிறார். அவரது வாதம் உண்மையின் அடிப்படையிலும், உண்மையிலேயே சரியானதுமாக இருந்ததென்றால், (த:ப்ஸீர் எழுதும்) இந்தப் போட்டியின் நேரத்தில் அவருக்கு என்ன அச்சம் இருந்தது? மாறாக, அது நற்செய்திக்கும், மகிழ்ச்சிக்கும் உரிய சந்தர்ப்பமாக இருந்தது. பயப்பட வேண்டியதும், நடுங்குவதற்கும் உரிய நேரமாக இருக்கவில்லையே! ஏனெனில் சோதனைக்குரிய அந்தப் போட்டியின் நேரத்திலும், எழுதும் நேரத்திலும் அவரிடம் மறைந்திருந்த சிறப்புகள் வெளிப்பட்டிருக்கும். மேலும் எல்லா மக்களும் அவருடைய மறைமுகமான மகத்துவத்தையும், அந்தஸ்தையும் அறிந்திருப்பார்கள். ஒரு கிணற்றின் இனிப்பான தண்ணீரை அருந்துவதால் அது அன்பிற்குரியதும், நேசத்திற்குரியதுமாக ஆகி விடுவதைப் போன்றே, ஒரு முழுமையான ஆண் மகனின் சிறப்பு வெளிப்படுவதால் அவரது மதிப்பும், கவுரவமும் முற்றிலும் அதிகமாகி விடுகிறது என்பது தெரிந்த விஷயம்தான்.

எவர் திருக்குர்ஆனின் த:ப்ஸீர் மீது கைதேர்ந்தவராக இருக்கிறாரோ அவர் திருக்குர்ஆனின் சில ஞானங்களைப் பற்றிய கேள்வியில் மகிழ்ச்சி அடைகிறார் என்பது மறைவான விஷயமல்ல. ஏனெனில் அவரது நட்சத்திரம் ஒளிர்கின்ற நேரம் வந்து விட்டது என்றும், அவர் புகழைப் பெறுகின்ற, அவரது எதிரி இழிவடைகின்ற காலம் வந்து விட்டது என்றும் அவர் அறிகிறார். எனவே அவர் போட்டிக்காக அழைக்கப்பட்டால், நேரடி மோதலுக்கு அழைக்கப்பட்டால் துயரப்படவோ, துக்கப்படவோ மாட்டார். மாறாக, அவரது மகிழ்ச்சி அதிகமாகி விடுகிறது. அவர் அதை தனக்காக ஒரு நற்செய்தியாக அல்லது தனது தலைமைத்துவத்திற்கு நல்ல சகுனமாகக் கருதுகிறார்.

ஏனெனில் :பாஸில் பட்டம் பெற்ற ஓர் ஆலிமின் முழுமையான மதிப்பும், கவுரவமும் அவரது முழு நிலாவின் ஒளிகளைப் பார்த்த பிறகுதான் தென்பட முடியும். மேலும்

அவருடைய மறைந்திருக்கும் சிறப்புகள் வெளிப்பட்ட பிறகே மக்களின் கழுத்துகள் முழுமையாக அவருக்கு முன்னால் குனிகின்றன. நாம் இந்தப் போட்டிக்காக சூரா ∴பாத்திஹாவைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். ஏனெனில் இது أُمُّ الْكِتَابِ (உம்முல் கிதாப் - இறை நூலில் தாய்), مِفْتَاحِ الْفُرْقَانِ (மி∴ப்தாஹுல் ∴புர்கான் - உண்மையையும், பொய்யையும் பிரித்தறிவிக்கும் இறை நூல்) ஆகும். முத்துக்கள், பவளம் ஆகியவற்றின் சுரங்கத்தையும், இறைஞானம் எனும் பறவைகளுக்கு கூட்டையும் போன்றதாகும். எனவே (நான், பீர் மஹ்ர் அலி ஆகிய) நம்மில்




ஒவ்வொருவரும் தனது த∴ப்ஸீரை உள்ளத்தை ஒளிமயமாக்குகின்றதாகவும், பொருள்கள் (அர்த்தங்கள்) அவற்றின் மேன்மைகளை உள்ளடக்கி இருப்பதைப் பொருத்தவரை, சூரியனுக்கு ஒத்ததாகவும் இருக்கின்ற அத்தகைய மிக உயர்ந்த கருத்துச் செறிவுள்ள சொற்றொடர்களில் எழுத வேண்டும். (நான், பீர் மஹ்ர் அலி ஆகிய) நம்மில் எவர் கருத்துச்செறிவில் உயரமான மலை உச்சியில் அமர்ந்திருக்கிறார். எவர் எடுத்துக் கூறும் இன்பம் எனும் வாகனத்தில் அமர்ந்திருக்கிறார் என்று மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் அவ்வாறு எழுத வேண்டும். அவருடைய அறிவு அந்த அறிஞரை அடையாளம் கண்டு கொள்ளும் வகையில் இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் மேலும் எவருடைய அறிவு அவரை இந்தக் குறிக்கோளின் பக்கம் கொண்டு வந்திருக்கிறது என்ற அப்படிப்பட்ட அந்த அறிவுள்ளவரை அடையாளம் கண்டு கொள்ளும் வகையிலும், எவருடைய புத்திக் கூர்மை அரபு மொழியின் தோட்டத்தின் பக்கம் இழுத்துக் கொண்டு வந்திருக்கிறதோ அந்த இலக்கிய அறிவுடையவரையும் அடையாளம் கண்டு கொள்ளும் வகையில் இருக்க வேண்டும்.

(நான், பீர் மஹ்ர் அலி ஆகிய) நம்மில் ஒவ்வொருவரும் தத்தமது குறிக்கோளைப் பெறுவதற்காக தமது உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த குதிரைகளை இந்தப் போட்டியின் ஓட்டத்தில் பலவீனமாக்கி விட வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்ய வேண்டும். (அதாவது தத்தமது குதிரைகளை பலவீனமாக்கி விடும் அளவுக்கு அவர் போட்டியில் தீவிரமாக இறங்க வேண்டும் - மொழிபெயர்ப்பாளர்). இறைவனின் உதவி எவருடன் இருக்கிறது என்பதையும், தேவைகள் அற்றவனாக இருப்பவ(ன்ஆகிய இறைவ)னின் கை எவரை அரவணைத்-திருக்கிறது என்பதையும் மக்கள் கண்டு கொள்வதற்காகவும், தனது எழுதுகோல் மற்றும் மை ஏற்ற இறக்கத்தின் எல்லா பாதைகளைக் கடந்து செல்ல வேண்டும் என்பதற்காகவும் அவ்வாறு செய்ய வேண்டும். இவ்வாறு இறைவனைப் பற்றிய அறிஞராக இருக்கிறேன் என்று வாதிடுபவருக்கு, இலக்கியத்தின் இன்பங்களையும், கருத்துகளின் அற்புதங்களை கவனத்தில் கொண்டவாறும் சப்வும் மஸானீ (திருப்பத் திரும்ப ஓதும் சூராவாகிய சூரா ∴பாத்திஹா)-க்கு த∴ப்ஸீர் எழுதுவது எந்தக் கடினமும் அல்ல.

பிறகு நான் (மஹ்ர் அலி ஆகிய) அவரது கடிவாளத்தை முற்றிலும் தொய்வாக விட்டு விட்டேன். அவர் எளிதாக எழுதுவதற்காக அவருக்காக நான் பேச்சில் இடத்தை விட்டு வைத்திருந்தேன். நான் வெளியிட்டு விட்ட எனது பிரசுரத்திலும், அவருக்கு அனுப்பிய கடிதத்திலும், இந்த அறிவில்லாத நபர் இந்த விஷயத்தில், தானே ஆற்றல் இல்லாதவராக இருந்தால், ஆலிம்களின் ஒரு கூட்டத்தை தன்னுடன் சேர்த்துக் கொள்ளட்டும். அல்லது அரபு நாட்டிலிருந்து இலக்கிய அறிஞர்களின் ஒரு கூட்டத்தை அழைத்துக் கொள்ளட்டும். அல்லது தனது சமுதாயத்தின் நல்லவர்களிடமிருந்து இந்தக் கடினமான வேலைக்கான தைரியம் கிடைப்பதற்கும், துஆவுக்காகவும் விண்ணப்பத்தை -யும் செய்யட்டும். இதற்கான அதிகாரம் அவருக்கு இருக்கிறது என்று நான் எழுதியிருந்தேன். இவர்கள் அனைவரும் அறிவற்றவர்கள் ஆவர். அவர்களில் எவரும் இது போன்ற த∴ப்ஸீரை எழுதுவதற்கு ஆற்றலையும், வல்லமையையும் கொண்டிருக்கவில்லை என்பதை மக்கள் அறிந்து கொள்ளட்டும் என்பதற்காக மட்டுமே நான் இந்த விஷயத்தைக் கூறியிருந்தேன். போட்டிக்காக அழைப்பு விடுக்கப்பட்டிருக்கும் இந்த மனிதர் சென்ற காலத்தில் ஆலிமாக இருந்தார்; ஆனால் இப்போது பனிக்கட்டி உருகி இல்லாமற்போய் விடுவதைப் போன்று, அவருடைய அறிவு இல்லாமற் போய் விட்டது என்றும், இவர் மீது மறதி எனும் சிலந்திகள் வலையைக் கட்டி விட்டன என்றும் கூறுவது சரியாக இருக்காது. ஏனெனில் எந்த அறிவை அவர் வாதிப்பவராக இருக்கிறாரோ, எதை அவர் மனனம் செய்தாரோ, பாதுகாத்து வைத்தாரோ, தொடர்ந்து படித்துக் கொண்டிருந்தாரோ, அந்த அறிவு அவருக்கு தாய்ப்பாலைப் போன்று இருப்பது அவசியமாகும். அது அவரை வளர்த்தது. அல்லது அவரது வீட்டை நன்றாக ஒளியூட்டிய, அதற்குப் பொலிவை வழங்கிய அத்தகைய விளக்கைப் போன்று இருக்க வேண்டும்.

பின்னர் அந்த அறிவு இவ்வளவு சீக்கிரம் எவ்வாறு அழிந்து போய்விட முடியும்? மேலும் அந்த அறிவு, துளையிடப்பட்ட பாத்திரத்தைப் போன்று எப்படி வெற்றிடமாகி விட முடியும்? இவ்வளவு குறைந்த காலகட்டத்தில் உள்ளம் எனும் பலகையில் ஓர் எழுத்து கூட எஞ்சியிருக்காத அளவுக்கு உணர்வின் மீதும் உள்ளத்தின் மீதும் மறதி எனும் ஆபத்து வருவது எப்படி சாத்தியமாகும்? மேலும் உயிரை

ஆபத்தில் இட்டு நீண்ட கடினமான உழைப்புக்குப் பிறகு பெறப்பட்ட அந்த ஞானங்களின் மீது மறதிகள் எனும் புயல் காற்று எவ்வாறு வீச முடியும்? மறதி எனும் ஆபத்து அவருடைய அறிவு எனும் மரத்தை வேருடன் பிடுங்கி எறிந்து விட்டது என்றும், இழப்பிற்குரியது எனும் மின்னல்கள் அவருடைய புரிதலின் பசுமையான கிளைகளின் மீது விழுந்து விட்டன என்றும் ஒரு கற்பனையாக வைத்துக் கொண்டாலும், மறதி எனும் இந்த சோதனை அவருடன் இணைந்திருப்பவர் -களாக குறிப்பிடப்பட்டவர்களின் மீதும், அவருடைய சுமையை சுமப்பதில் அவருக்கு உதவியாளர்களாக இணைந்திருப்பவர்களின் மீதும், அந்த ஆயிரக்கணக்கான ஆலிம்களின் மீதும் வந்து விட்டது என்பதை நாம் எவ்வாறு கற்பனை செய்ய முடியும்? இன்னும் கூறுவதென்றால், அவருக்கு எத்தனை இலக்கிய அறிஞர்கள் கிடைக்க சாத்தியமிருந்தாலும், அவர் அவர்களை அழைத்துக் கொள்ளட்டும். ஒருவேளை இதனால் அவர் ஏதாவது கருத்துச் செறிவுள்ள கூற்றை எழுத இயலும். குருட்டு ஒட்டகத்தைப் போன்று சுற்றித் திரிய வேண்டாம் என்பதற்காகவும் அவருக்கு அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது.

பிறகு, ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம் என்னவெனில், அல்லாஹ் நல்லவர்களின் அறிவுகளை அதிகமாக்குகிறான்; ஆன்மிக மக்களின் பாதைகளின் பக்கம் நேர்வழிகாட்டி நற்பேறு பெற்றவராக ஆக்குகின்றான்; இறைவனின் பரிசுத்தமான கூற்றின் ஞானங்கள் அவர்களுக்கு மறந்து விடும்போதெல்லாம் அவன் அவர்களுக்கு நினைவூட்டி விடுகிறான்; பூகம்பங்களின் நேரத்தில் அவர்களின் உள்ளங்களில் மன அமைதியை இறக்குகிறான்; மேலும் ரூஹுல் குத்ஸ் (எனும் பரிசுத்த ஆவியால்) அவர்களுக்கு ஆதரவளிக்கிறான். மேலும் அவர்கள் எடுத்துரைக்கும் நேரத்தில் அவன் தனது அருளால் அவர்களுக்கு உதவி செய்கிறான்; அவர்களின் எல்லா வேலைகளிலும் அவர்களுக்கு ஏற்பாடு செய்பவனாக ஆகி விடுகிறான்; மேலும் அறிவு மற்றும் தன்னடக்கத்தின் மூலமாக அவர்களை (மற்றவர்களை விட) தனிச்சிறப்புள்ளவர்களாக ஆக்கி விடுகிறான். மேலும் அவர்களை அறியாமையிலிருந்து விலக்கி வைக்கிறான். மேலும் ரிவாயத்திலும் (அறிவிப்பு செய்வதிலும்), திராயத்திலும் (அறிவுடைமையிலும்) அவனே அவர்களைப் பாதுகாக்கிறான்.

எனவே (நல்லவர்களாகிய) அவர்கள் வெட்கத்தின் இடத்தில் நிற்பதுமில்லை; அவமானத்தின், நஷ்டத்தின் நாளைப் பார்ப்பதுமில்லை. அவர்களின் ஒளிகள் மங்கலாகி விடுவதுமில்லை; அவர்களின் வீடு பாழடைவதுமில்லை. அவர்களின் நீரூற்று வறண்டு போவதுமில்லை. அவர்களின் வேலைகள் நாசமாவதுமில்லை. அவர்களுக்கு எல்லா களத்திலும் ஆதரவும், உதவியும் செய்யப்படுகிறது. அவர்களுக்கு எல்லா வகையான ஞானங்களும் வழங்கப்படு -கின்றன. மேலும் அவர்கள் எல்லா அறியாமையிலிருந்தும் தொலைவில் வைக்கப்படுகிறார்கள். அவர்களின் உயிர்களுக்கு முழுமைத்தன்மை வழங்கப்படாதவரை அவர்கள் மரணிப்பதில்லை. மேலும் அவை முழுமையாக்கப் -படும்போது, அவர்கள் தம் இறைவனின் பக்கம் திருப்பிக் கொண்டு செல்லப்படுகின்றனர். அல்லாஹ் ஒளியாவான். எனவே அவன் ஒளியின் பக்கம் சாய்ந்தவனாக இருக்கிறான். எவர்கள் முழுமை பெற்றவர்களாக இருக்கின்றார்களோ அவர்களின் பக்கம் பாய்ந்தோடுவது அவனது நடைமுறை ஆகும். அல்லாஹ்வின் பழக்கமும், நடைமுறையும் தனது அவ்லியா (நேசர்கள்), தனது தூய அடியார்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்கள் ஆகியோருடன் இவ்வாறே இருந்து வந்திருக்கிறது. அப்படி இருக்கும்போது அவனால் ஒப்புக்கொள்ளப்பட்ட அடியார் இழிவின் முகத்தைப் பார்க்காமல் இருப்பதும், மார்க்கத்தைச் சேர்ந்தவருக்குப் போட்டியின் நேரத்தில் அவருடன் எந்த பலவீனமும், நோயும் தொடர்புபடுத்திக் கூறப்பட முடியாதிருப்பதும் கட்டாயமான -தாக இருக்கிறது. மேலும் அவர் திருக்குர்ஆனுக்கு த.ஃப்ஸீர் எழுதும் நேரத்தில் பல்வேறு வகையான அறிவு, ஞானத்தின் மூலமாக அனைவரையும் விட மேலோங்கி விட வேண்டும். இறைநேசர் திருக்குர்ஆன் மூலமாக வெளிப்படுகிறார்;



திருக்குர்ஆன் இறைநேசர் மூலமாக வெளிப்படுகிறது என்று ஆய்வின் மூலமாக கூறப்படுகிறது.

எல்லாம் அறிந்தவனும், மேலானவனும் ஆகிய இறைவனின் ஆற்றல் எனும் கையிலிருந்து தோன்றுபவருக்கே திருக்குர்ஆனின் மறைவான கருவூலங்கள் (அடையாளங்கள், நுட்பங்கள்) வெளிப்படுகின்றன. பின்னர் தனிமையாகவே அத்தகைய தெளிவான, தனிச் சிறப்பான புரிதலின் எஜமானராக ஒருவர் இருக்கின்றார் என்றால், அவர் எந்தக் கடினமும், நிம்மதியின்மையுமின்றி புதைக்கப்பட்ட ஒரு கருவூலத்தை வெளியில் கொண்டு வந்தவரைப் போன்றவர் ஆவார். அப்போது அவர் வலியுல்லாஹ் (அல்லாஹ்வின் நேசர்) ஆவார். மேலும் அவரது மதிப்பு, மிகவும் மகத்துவமுள்ளதாகும். மேலும் அவரது ஆடையின் நுனி ஒவ்வொரு குறை கூறுபவரின் குறையை விட்டும், ஒவ்வொரு குறை தேடுபவரின் குறை தேடலிலிருந்தும் மிக உயர்ந்ததாகும்.

மேலும் அல்லாஹ்விடம் தன்னை மாய்த்துக் கொண்ட அந்த வலியுல்லாஹ்வுக்கு (அல்லாஹ்வின் நேசருக்கு) பயணத்தின் ஆயத்தப் பொருள்களாக வழங்கப்படுகின்ற திருக்குர்ஆனின் அந்த ஞானங்கள் மு.ஃஜிஸா (அற்புதம்) ஆக இருக்கின்றது. இன்னும் கூறுவதென்றால், அவை எல்லா வகையான அற்புதங்களை விடவும் மிக உயர்வானவையாக இருக்கின்றன. திருக்குர்ஆனின் நிழலாக அமைந்திருக்கும் அந்த அற்புதத்தை விடப் பெரிய அற்புதம் வேறு என்ன இருக்க முடியும் என்று கூறுங்கள். மேலும் அது மனிதனின்

வல்லமையை விட உயர்வானதாக இருக்கின்ற காரணத்தால் இறைவனின் சொல்லுக்கு ஒத்ததாக இருக்கின்றது. மேலும் இந்த அந்தஸ்து இறையச்சம் கொண்டவர்களுக்கு மட்டுமே தனித்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. மேலும் இந்த வாசல்கள் சாலிஹுஃகள் (எனும் நல்லடியார்களுக்கு) மட்டுமே திறக்கப்படுகின்றன.

பரிசுத்தமாக்கப்பட்டவர்களைத் தவிர வேறு யாரும் திருக்குர்ஆனின் இந்த ஞானங்களைத் தொடக் கூட முடியாது. மேலும் அல்லாஹ் நம்பிக்கை துரோகம் செய்பவர்களின் திட்டத்தை ஒருபோதும் வெற்றியடையச் செய்வதில்லை. எவர்கள் ஏமாற்றுதலை தங்களது வாழ்வாதாரமாக ஆக்கிக் கொண்டார்களோ, பொய்யான விஷயங்களை தமது தொடக்கமான இடமாகவும், சென்று சேரும் இடமாகவும் ஆக்கிக் கொண்டார்களோ அவர்களின் உள்ளங்கள் தனது ஆடையை பரப்பி விட்டிருக்கின்ற அந்த இரவைப் போன்றவையாகும். மேலும் தனது பார்வையின் எல்லை வரை தனது கயிறுகளால் இழுத்துக் கட்டி வைத்திருக்கின்ற அந்த இருளைப் போன்றதாகும். திருக்குர்ஆன் என்பது என்ன? அறிவு, இறைஞானம் என்பது என்ன என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள்.

எந்த நபருக்கு திருக்குர்ஆனைப் பற்றிய ஞானம் இல்லையோ, எவருக்கு எடுத்துரைக்கும் ஆற்றல் வழங்கப்படவில்லையோ அப்படிப்பட்டவர் ஒன்று ஷைத்தான் ஆவார் அல்லது ஷைத்தானுக்கு ஒப்பானவர் ஆவார். மேலும் அவர் ரஹ்மானாகிய இறைவனை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. ஒரு தீயவர் தனது இழிவான ந.்.ப்ஸை அதன் பக்கம் எவ்வளவுதான் கூர்மையாக்கினாலும் இந்த உயர்ந்த ஆசை வரை செல்வதற்கு அவருக்கு என்ன தைரியம் இருக்கிறது? இன்னும் கூறுவதென்றால், அந்தத் தீயவர் தனது (முகத்)திரை கிழிந்து விடும் என்ற பயத்தாலும்,

> “எல்லாம் அறிந்தவனும்; மேலானவனும் ஆகிய இறைவனின் ஆற்றல் எனும் கையிலிருந்து தோன்றுபவருக்கே திருக்குர்ஆனின் மறைவான கருவூலங்கள் (அடையாளங்கள்; நுட்பங்கள்) வெளிப்படுகின்றன. பின்னர் தனிமையாகவே அத்தகைய தெளிவான; தனிச் சிறப்பான புரிதலின் எஜமானராக ஒருவர் இருக்கின்றார் என்றால்; அவர் எந்தக் கடினமும்; நிம்மதியின்மையுமின்றி புதைக்கப்பட்ட ஒரு கருவூலத்தை வெளியில் கொண்டு வந்தவரைப் போன்றவர் ஆவார். அப்போது அவர் வலியுல்லாஹ் (அல்லாஹ்வின் நேசர்) ஆவார். மேலும் அவரது மதிப்பு; மிகவும் மகத்துவம் உள்ளதாகும். மேலும் அவரது ஆடையின் நுனி ஒவ்வொரு குறை கூறுபவரின் குறையை விட்டும்; ஒவ்வொரு குறை தேடுபவரின் குறை தேடலிலிருந்தும் மிக உயர்ந்ததாகும்.”

தடுமாற்றம் வெளிப்பட்டு விடும் என்ற பயத்தாலும் வெருண்டோடும் வழியை மேற்கொள்கின்றார். இவ்வாறே (பீர் மஹர் அலி என்ற) இந்த சூழ்ச்சிக்காரரும், ஏமாற்றுக்காரரும் ஆகிய வேட்டையாடுபவர் செய்தார். பாருங்கள். அவர் எவ்வாறு பொய்யை அலங்கரித்தார்! மேலும் அட்டூழியத்தைக் காட்டினார். மேலும் நான் அறைகூவலை ஏற்றுக் கொண்டேன் என்று கூறினார்; ஆனால் அவர் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தப் போட்டிக்காக நான் படையை ஆயத்தம் செய்து வைத்துள்ளேன் என்றும் அவர் கூறினார். ஆனால் அவர் ஆயத்தம் செய்யவில்லை; அவர் போட்டியின் களத்தில் இறங்கவில்லை; மாறாக, ஏமாற்றினார்; வஞ்சித்தார். மேலும் தனது பொந்துக்குள் திரும்பிச் சென்று விட்டார். அவர் தன்னைத்தானே உறுதியான மனிதராக காட்டிக் கொண்டிருந்த நிலையில், அவர் ஒல்லியானவராகவும், பலவீனமானவராகவும் வெளிப்பட்டார். அவர் பூமியின் பக்கம் சாய்ந்து விட்டார். மேலும் உடும்பைப் போன்று ஆகி விட்டார். அவர் உயர்வின் பக்கம் ஏறவுமில்லை; உறுதியுடன் நிலைபெற்றிருப்பதைக் காட்டவுமில்லை. ஒழுக்கங்கெட்ட மக்களை ஒன்று சேர்த்தார். இறைவனை அழைக்கவில்லை. மேலும் என்னை ஏளனப்படுத்தினார்; வசை பாடினார்.

அவர் சாக்குப்போக்கைக் கூறினார். மேலும் அல்லாஹ்வுடன் கலப்பற்றதும், அன்பானதுமான தொடர்பை வைக்கவில்லை. அவர் படைத்தவனுக்காக அல்லாஹ் அல்லாதவற்றுடன் இருக்கும் தொடர்புகளை துண்டிக்காவோ, முடித்துக் கொள்ளவோ இல்லை. அவர் தன்னை ஆலிம் என்று கூறினார். ஆனால் அவரது அறிவின் நட்சத்திரம் மூழ்கிவிட்டிருந்தது. அவர் தீட்டிய சதித்திட்டம் நாசமானது. அவர் உண்மையிலேயே ஆலிம் என்றால், ஓர் ஆலிமுக்கு திருக்குர்ஆனின் சூராக்களில் ஒரு சூராவுக்கு திருக்குர்ஆனின் (மொழியாகிய அரபு) மொழியில் த.்.ப்ஸீர் எழுதுவதில் என்ன கஷ்டம் இருக்கிறது? மாறாக, அவ்வாறு செய்வதால் உண்மையான உள்ளத்தால் அவர் புகழப்பட்டும், போற்றப்பட்டும் இருப்பார். மேலும் அவர் சிறப்பையும், அறிவையும், கருத்துச் செழுமையுள்ள கூற்றையும் எடுத்துக் கூறுபவர் ஆவார் என்பது தெரிந்திருக்கும். மேலும் ரஹ்மானாகிய இறைவன் புறமிருந்து கற்றுக் கொடுக்கப்பட்ட அந்த ஞானங்களால் மக்களுக்கு பயனளிப்பவராக இருப்பதன் காரணத்தால் அவருக்கு நன்றி செலுத்தப்பட்டிருக்கும்.

எனவே நான் கூறுகிறேன்: எவர் அப்படிப்பட்ட உயர்ந்த, மேலான இடத்தின் உச்சியில் இருப்பதாக வாதிடக் கூடியவராக இருக்கின்றாரோ, அவர் தன்னால் இயன்றவரை முயற்சி செய்ய வேண்டும். மேலும் தன்னை ஓர் உறுதியான சிறந்த குதிரையைப் போன்று நிரூபிக்க வேண்டும். சந்தேகமின்றி, மேன்மையை வெளிப்படுத்துவது ஆண்களுடைய பண்பும், தைரியமிக்கவர்களின் இயல்புமாகும். அந்த வழிமுறையால் மக்கள் அவரிடமிருந்து பயன் பெற வேண்டும் என்பதற்காகவும், அவர் மூலமாக ஒரு பலவீனமான அடியார் வழிகேடு எனும் சிறைச்சாலையிருந்து வெளியே வர வேண்டும் என்பதற்காகவும் அவர் அவ்வாறு செய்ய வேண்டும். ஒரு முழுமையான ஆண் என்பவர் ஒரு பெயர் தெரியாத நபரைப் போன்று அறியப்படாத வாழ்க்கையை கழிப்பதையும், அவர் அறியப்படாதவராக ஆக முடியாதவராகவும், அவர்

குறிப்பிடத்தக்க அளவுக்கு இல்லாது இருப்பதையும் சகித்துக் கொள்ள மாட்டார்.

(அதாவது முழுமையான ஓர் ஆண், தான் அறியப்பட்டவராக இருக்க வேண்டும் என்பதையும், குறிப்பிடத்தக்க வகையில் இருக்க வேண்டும் என்பதையும் விரும்புவார் - மொழிபெயர்ப்பாளர்).

கருத்துச் செறிவுள்ள கூற்றை எடுத்துரைக்காதவரை எந்த சிறப்புத்தன்மையும் நிரூபிக்கப்பட்டதாக இருக்க முடியாது. நான் படைப்பாளனாகிய இறைவனிடமிருந்து கிடைக்கும் தூதுக்கு சான்றாக எனது த.்.ப்ஸீரை எழுவதையும், அரபு மொழியின் கருத்துச் செறிவான கூற்றுகளை எடுத்துரைப்பதற்கும், இலக்கண நுணுக்கங்களின் மூலமாகவும் அரபு மொழியின் சொற்செறிவை கட்டாயமானதாகக் கொண்டவாறு சூரா .்.பாத்திஹாவின் திறவுகோலால் இந்தக் கதவுகளை நான் திறக்க வேண்டும் என்பதையும் நான் என் மீது கட்டாயமாக்கிக் கொண்டேன். மார்க்கத்தின் நுட்பங்களையும், அறிவின் அடையாளங்களை -யும், உவமைகளையும், சைகைகளையும் அழகுபடுத்தப்பட்ட சொற்றொடர்கள், மோனைப் பொருத்தங்களைக் கொண்ட உருவகங்கள், அழகிய முறையில் எடுத்துரைத்தல், நுட்பமான அழகுபடுத்தப்பட்ட சொற்றொடர்கள் ஆகியவற்றை மேற்கொண்டவாறு எழுதுவது என்பதெல்லாம் ஓர் அதிக கடினமான விஷயமும், மிகவும் சிரமமான வேலையுமாக கணக்கிடப்படுகிறது. மேலும் மிகத் தெளிவான வசனங்களின் தோற்றமாகவும், பொய்யான, முட்டாள்தனமான விஷயங்களை அழிக்கக் கூடியதாவும் இருக்கின்ற அல்லாஹ்வின் மறைநூல்தான் இந்த இரு வேறுபட்ட விஷயங்களை ஒன்று சேர்த்திருக்கின்றது.

கவிஞர்கள் (கருத்துச் செறிவின்) இந்த உயர்ந்த குதிரைகளை ஓட்டுவதற்கு எஜமானர்களாக முடியாது. அவர்களின் சொற்கள் வெறும் சிதறியிருக்கின்ற வெட்டுக் கிளிகளைப் போன்று சிதறுண்டு இருக்கின்றன. ஆனால் நான் யார் என்றால், அல்லாஹ்விடம் நான் கேட்டதை அவன் எனக்குக் கொடுத்து விட்டான். நான் அவனிடம் தாகித்தவனாக வந்தேன். அவன் எனக்கு தண்ணீரால் தாகத்தை தணித்து விட்டான். நாம் அல்லாஹ்விடமிருந்து தவ்.்.பீக்கைப் பெற்றவர்கள் ஆவோம். ஆதரவைப் பெற்றவர்கள் ஆவோம். எழுதுகோல் நமக்கு அம்பையும், வாளையும் போன்று உதவுகின்றது.

நமக்கு நம் இறைவனிடமிருந்து நிறைவான சொல்லும் அடர்த்தியான நிழலும் கிடைத்திருக்கிறது. எந்தப் போர்வையை நாம் உடலில் போர்த்தி உடலை அழகுபடுத்தினாலும் அது அழகாகத் தென்படுகிறது. நமது இயல்பு எத்தகையது என்றால் மலைகளும் அதுவரை சென்றடைய முடியாது. பெரிதிலும் பெரிதான சுமையும் பலவீனப்படுத்த முடியாத அத்தகைய ஆற்றல் நமக்குக் கிடைத்திருக்கிறது. நமது மகத்துவம் எத்தகையது என்றால், அதை காலத்தின் நிலைமைகள் மாற்றி விட முடியாது. மேலும் நமக்கு எத்தகைய இறைவன் இருக்கின்றான் என்றால், அவனது சந்நிதியிலிருந்து நம்பிக்கைகள் மறுக்கப்படுவதில்லை.

சுருக்கமாக, நான் அல்லாஹ்வின் புறமிருந்துள்ளவன் ஆவேன். மேலும் எனது கூற்றும், எல்லாம் நன்கு அறிந்தவனாகிய இறைவனிடமிருந்துள்ளதேயாகும். நான் எனது எதிரியின் தேவையை நிறைவேற்றுவதற்காகவும், மனக் கலக்கத்திலிருந்து அவருக்கு ஈடேற்றத்தைக் கொடுப்பதற்காகவும் இந்த நூலில் எனது வாதத்தையும், அதற்கான சான்றுகளையும் எழுதியிருக்கிறேன். ஏனெனில் இதற்குப் பிறகு நான் (மஹர் அலி என்ற) அவருக்கு கருத்துச் செறிவின் கோணத்திலும், உருவகங்களின் மேன்மைகளின் கோணத்திலும் த.்.ப்ஸீர் எழுதுவதற்கு அழைப்பு விடுத்தேன். போட்டியாளராகிய அவர் என்னை விவாதங்கள் செய்ய அழைக்கத் தொடங்கி விட்டார். பின்னர் நான் விவாதங்களில் இருந்து முகம் திருப்பியபோது, எனது காரணத்தை எடுத்து வைத்தபோது, அவர் எனது இந்த மறுப்பை இந்தப் போரிலிருந்து நான் வெருண்டோடுவதாக வருணித்தார். மேலும் இது பழித்துரைக்கின்ற ஆண்கள், பெண்களின் பழித்துரைத்தலிலிருந்து அவர் தப்பிப்பதற்காக தன்னை விடுவித்துக் கொள்ளும் வகையில் ஒரு சதித்திட்டமாகவும், சூழ்ச்சியாகவும் இருந்தது.

விவாதத்திலிருந்து நான் விலகுவது என்பது எனது சென்றகால ஓர் உடன்படிக்கையின் அடிப்படையில் இருந்தது என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். மேலும் நான் எந்தவொரு வெருண்டோடும் அடிமையைப் போன்றவன் அல்லன். ஆயினும், இவர் மிகப் பெரிய களத்தின் ஆண்மகன் எனவும், சான்றை முழுமைப்படுத்துபவர் எனவும் மக்கள் அவரைப் பற்றிக் கருத வேண்டும் என்பதற்காக அவர் அந்தப் பொய்யான சாக்குப்போக்குகள் மூலமாக வெருண்டோடும் வழியைத் தேட விரும்பினார்.

எனவே அவரது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் எனவும், அவரை வெறுமையாக திருப்பி அனுப்பக் கூடாது எனவும், நாம் நமது உண்மை உதிக்கும் இடத்தை சான்றுகள் எனும் ஒளியால் ஒளியூட்ட வேண்டும் எனவும், எடுத்துரைக்கும் வாளால் அவரது எல்லா சாக்குப் போக்குகளையும் வெட்டி வீழ்த்தி விட வேண்டும் எனவும் நாம் இப்போது எண்ணம் கொண்டு விட்டோம். ஒருவேளை இவ்வாறு அல்லாஹ் (அவர்களின்) மூளைகளின் துருக்களை நீக்கி விடலாம். மேலும் அவர்கள் இந்தக் களத்தில் இறங்குவதற்கு முன்னர் அவர்களால் புரிய முடியாதிருந்தவற்றை அவர்களுக்குப் புரிய வைக்கலாம்.

எனவே கேள்வி கேட்கும் எவருக்கும் எந்தவொரு சாக்குப்போக்கும் எஞ்சியிருக்கக் கூடாது எனும் வகையில், வாதம் மற்றும் சான்றுகளை எழுதுவதற்குக் காரணமாக இருந்தது இதுதான். இந்த த.்.ப்ஸீர் எல்லா விவாதங்களையும் நுட்பங்களுடனும், நுணுக்கங்களுடனும் தன்னிடம் தொகுத்து வைத்திருக்கின்றது. எனவே (மஹர் அலி ஆகிய) அவர் நேர்மையின் எல்லா முறைகளையும் விட்டு விட்டார் என்ற போதிலும், இன்று பகைவர் (ஆகிய மஹர் அலி) விவாதங் -களின் கோணத்தில் நம்மிடம் கேட்டுக் கொண்டிருக்கின்ற அவை அனைத்தையும் அவர் பெற்று விட்டார். மேலும் இந்த விவகாரத்தில் அவர் எல்லா வகையான உரிமைகளைப் பறித்தல்களுடனும், நம்பிக்கை துரோகங்களுடனும் நடந்து கொண்டார் என்றாலும் நமது கடன் எஞ்சியிருக்கிறது.

எனவே அவர் அமானிதங்களை திருப்பிக் கொடுப்பதைப் போன்று, இந்தக் கடனைத் திருப்பிக்

கொடுப்பது அவருக்குக் கடமையாகும். நான் விவாதங்களின் இடங்களுக்குச் செல்ல மாட்டேன் என்று நான் அல்லாஹ்விடம் வாக்குறுதி கொடுத்திருக்கின்றேன். மேலும் நான் இந்த வாக்குறுதியை எனது நூல்களில் வெளியிட்டிருக்கிறேன். எனவே வாக்குறுதியை மீறுவதும், எனது அன்பாளனாகிய இறைவனுக்கு மாறு செய்வதும் எனக்கு சாத்தியமில்லாத ஒன்றாக இருந்தது. எனவே நான் விவாதங்களின் வாசலை மூடி விட்டேன். மேலும் என்னைப் பற்றிக் குறை கூறுவதையும், புறங்கூறுவதையும் அவர்கள் செய்த போதிலும் நான் விவாதம் செய்வதற்காக எனது எதிரியிடம் வரவில்லை. நான் அவருடன் தொடர்பு வைத்திருக்கின்ற ஒரு நண்பனைப் போன்று பேசினேன். ஆனால் அவர் முட்டாள்தனமான பேச்சுகளினால் என்னைக் காயப்படுத்தினார். நான் இதற்கு முன்னரும் ஒருமுறை அவருக்கு அழைப்பு விடுத்திருந்தேன். ஆனால் எனது கம்பீரத்தின் காரணமாக அவர் வெருண்டோடி விட்டார். பின்னர் நான் அவருக்கு மீண்டும் அழைப்பு விடுத்தேன். ஆனால் அவர் என்னைப் பற்றிய திகில் உணர்வால் பயந்து விட்டார். அவர் மீது அல்லாஹ்வின் சான்றும், எனது சான்றும் முழுமையடைந்து விடுவதற்கு இது எனது மூன்றாவது முறை(யின் அழைப்பு) ஆகும். அவர் மெல்லிசையின் பக்கம் சாய்ந்தார். நாம் பொறுப்பின் அடிப்படையிலான கடமையின் பக்கம் சாய்ந்தோம். நம் சார்பாக எடுத்து வைக்கப்பட்டிருந்த ஞானங்களின் தகுதி, ஒரு நாட்டின் அரசரின் சார்பாக நாட்டின் எல்லைப் புறங்களில் படைகள் நிறுத்தப்பட்டிருந்ததைப் போன்றதாக இருக்கிறது.

பின்னர் எனது இந்த நூல் அனைத்துலகங்களையும் படைத்துப் பரிபாலிக்கின்ற இறைவன் எனும் அல்லாஹ்வின் அடையாளங்களின் ஓர் அடையாளமாகும். உண்மையைத் தேடுபவர்களுக்கு அகப்பார்வையை வழங்கும் ஒரு தூது ஆகும் என்பதையும் அறிந்து கொள்வீராக. இது என்னைப் படைத்து பரிபாலிக்கின்றவனின் சார்பாக ஓர் உறுதியான சான்றும், மிகத் தெளிவான ஆதாரமும் ஆகும். இது பொய்யர்களுக்கு ஓரளவுக்கு அவர்களின் பாவங்களுக்கான தண்டனையின் சுவையை சுவைக்க வைப்பதற்காகவும், அவர்களின் பாத்திரத்திலிருந்து என்ன வெளியானது என்பதை மக்களுக்குக் காட்டுவதற்காகவும், அவர்களின் விலா எலும்புகளை வலுவான மு.ஃஜிஸாவால் (அற்புதத்தால்) முறித்து விடுவதற்காகவும், அவர்கள் தமது நிம்மதியாகப் புறண்டு படுக்க முடியாதிருப்பதற்காவும், அவர்களின் பொய்யான சுகத்தை அழித்து விடுவதற்காகவும் ஆகும்.

இது உண்மையாகும். மேலும் நான் உண்மையையே கூறுகிறேன். இது ஓர் உருவிய வாளைப் போன்றதாகும். மேலும் அது ஒவ்வொரு சண்டை, சச்சரவையும் வெட்டி விட்டது. இதற்குப் பிறகு வேறு எந்தச் சண்டை, சச்சரவும் எஞ்சியிருக்கவில்லை. எவர் தன்னைக் கருத்துச் செறிவுள்ளவர் என்றும், தன்னிடம் முழு நிலாவைப் போன்ற கூற்று இருக்கிறது என்றும் கருதுகிறாரோ, அவர் இதற்கு நிகரானதைக் கொண்டு வரட்டும். மவுனமாக இருப்பது அவருக்கு ஹராம் (தடுக்கப்பட்டது) ஆகும். அவர்களின் முன்னோர்கள், அவர்களின் சந்ததிகள், அவர்களுக்கு சமமானவர்கள், அவர்களின் ஆலிம்கள், அவர்களின் அறிஞர்கள், மார்க்கச் சட்டம் படித்தவர்கள் ஆகிய அனைவரும் ஒன்று சேர்ந்து சாதாரணமான, கொஞ்ச காலத்தில் எழுதப்படவிருக்கின்ற இந்தத் த.ஃப்ஸீருக்கு நிகரானதை எடுத்து வைக்க முடியும் என்றால் அவர்கள் அப்படிப்பட்ட த.ஃப்ஸீரை ஒருபோதும் எடுத்து வைக்க முடியாது - அவர்களில் சிலர் சிலருக்கு உதவியாளராக இருந்தாலும் சரியே!

(தொடரும்...)

ஒரு சபையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நமது ஜமாஅத்தில் குத்துச் சண்டையிடுபவர்கள் மற்றும் பலசாலிகளை உருவாக்குவது நமது நோக்கமன்று. பெரும் பலசாலிகள் நமக்கு வேண்டாம். நமது ஜமாஅத்திற்கு எத்தகைய சக்தி படைந்தவர்கள் தேவை எனில் அவர்கள் நல்லொழுக்கத்தில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்பவர்களாக இருக்க வேண்டும். தமது நல்லொழுக்கத்தில் மாற்றம் கொண்டு வந்து உயர் நல்லொழுக்கத்திற்கு அதனை எடுத்துச் செல்பவர்களாக இருக்க வேண்டும். யதார்த்தமான விஷயம் என்னவெனில், பலசாலி என்பவர் மலையை அதன் இடத்தில் இருந்து அகற்றுபவர் இல்லை. இல்லவே இல்லை. உண்மையான வீரர் என்பவர் நல்லொழுக்க மாற்றத்தை தம்மிடம் கொண்டு வர சக்தி படைத்தவரேயாவார். அவர் தம்மை கட்டுப்படுத்தக் கூடியவராகவும் நல்லொழுக்கத்தைக் கடைபிடிப்பவராகவும் இருக்க வேண்டும். ஆகவே நினைவில் கொள்ளுங்கள். உங்கள் எல்லா தைரியத்தையும் வீரத்தையும் நல்லொழுக்கத்தை மேம்படுத்துவதற்காகச் செலவழியுங்கள். ஏனெனில் அதுவே உண்மையான சக்தியும் துணிவும் ஆகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 140; 1985 ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)




திருக்குர்ஆன் மற்றும் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் உண்மையை நிலைநாட்டக்கூடிய வாதங்கள்

### பாகம் ஒன்று

در دلم جوشد ثنائے سرورے    آنکہ در خوبی ندارد ہمسرے

என் எஜமானைப் புகழும் ஆவலில் என் இதயம் பொங்குகிறது. அவரின் சிறப்புக்கு இணையான மனிதர் யாரும் இல்லை.

آنکہ جانش عاشق یارِ ازل    آنکہ روحش واصل آں دلبرے

நித்தியமான நண்பனாகிய இறைவனுக்கே தன் வாழ்வை முழுமையாக அர்ப்பணித்தவர். அவரது ஆன்மா தன் நேசத்திற்குரிய இறைவனிடம் ஐக்கியம் அடைந்துள்ளது.

آنکہ مجذوب عنایات حقست    ہمچو طفلے پر وریدہ در برے

இறைவனது அருளாலும் கருணையாலும் இறைவன் பக்கம் ஈர்க்கப்பட்டவர். ஒரு குழந்தையைப் போல் இறைவனின் மடியில் வளர்க்கப்பட்டவர்.

آنکہ در برّ و کرم بحر عظیم    آنکہ در لطف اتم یکتا دُرے

அவர் இறையச்சத்திலும் நன்மையிலும் எல்லையற்ற சமுத்திரம். கருணையிலும் இரக்கத்திலும் இணையற்ற ஒரு முத்து.

آنکہ در جود و سخا ابر بہار    آنکہ در فیض و عطا یک خاورے

தாராள மனப்பான்மையிலும் பெருந்தன்மையிலும் வசந்த கால மழையைப் போன்றவர். உதவிகளிலும் கொடைகளிலும் சூரியனைப் போன்றவர்.

آں رحیم و رحم حق را آیتے    آں کریم و جود حق را مظہرے

கருணையாளர். அவர் இறை கருணையின் ஓர் அடையாளம். தயாளமானவர். அவர் இறைதயாளத்தின் ஓர் அடையாளம்.

آں رخ فرخ کہ یک دیدار او    زشت رو را میکند خوش منظرے

அன்னாரின் வதனம் எத்தனை மகிழ்ச்சி தரக்கூடியது! அவலட்சனமான முகம் கூட அவரை ஒரு கணம் பார்ப்பதில் அழகாய் மாறி விடும்.

آں دل روشن کہ روشن کردہ است    صد درون تیرہ را چوں اخترے

ஒளிமயமான அன்னாரின் இதயம் இருளில் மூழ்கிக் கிடந்த நூற்றுக்கணக் –கான உள்ளங்களை நட்சத்திரங்களைப் போல ஒளி வீசச் செய்தது.

آں مبارک پے کہ آمد ذات او    رحمتے زاں ذات عالم پرورے

பிரபஞ்சத்தைப் பரிபாலிக்ககூடிய இறைவனிடமிருந்து ஓர் அருளுக்குரிய நேரத்தில் கருணையாக வந்தார்கள்

احمدِ آخر زماں کز نور او    شد دل مردم زخور تاباں ترے

அவரே இறுதிக் காலத்தின் அஹ்மது ஆவார். அவரது ஒளி உள்ளங்களை சூரியனைக் காட்டிலும் பிரகாசிக்கச் செய்கிறது.

از بنی آدم فزوں تر در جمال    وازلالے پاک تر در گوہرے

ஆதமின் சந்ததிகளிலேயே அழகானவர். தூய்மையான முத்துக்களைக் காட்டிலும் பிரகாசமானவர்.

برلبش جاری زحکمت چشمہ    در دلش پُر از معارف کوثرے

அவரது உதடுகளில் இருந்து ஞானஊற்று பெருக்கெடுத்தது. அவரது உள்ளத்தில் இறைஞானத்தின் ஊற்று எப்போதும் பொங்கி வழிகிறது.

بہر حق دامان ز غیرش برفشاند    ثانی او نیست در بحر و برے

நீரிலும் நிலத்திலும் அவரைப் போன்று ஒருவர் இல்லை. இறைவனுக்காக எல்லாவற்றிலிருந்தும் விலகிக் கொண்டவர்.

آں چراغش دادِ حق کش تا ابد    نے خطر نے غم ز بادِ صرصرے

இறைவன் அவருக்கு ஒரு விளக்கினை அருளினான். அவ்விளக்கு எந்த ஒரு புயலினின்றும் எக்காலத்திற்கும் பாதுகாப்பானது.

پہلوان حضرتِ ربِ جلیل    بر میاں بستہ ز شوکت خنجرے

மகத்துவமிக்க இறைவனின் வெற்றி வீரர். அவர் தனது மகிமையில் அவர் தம் வாளை அணிந்துள்ளார்.

تیرِ او تیزی بہر میدان نمود    تیغِ او ہرجا نمودہ جوہرے

அவரது அம்புகள் ஒவ்வொரு போரிலும் தமது வேகத்தைக் காட்டின. அவரது வாள் தன் சிறப்பை ஒவ்வொரு போர்க்களத்திலும் நிரூபித்தது.

کرد ثابت بر جہاں عجز بتاں    وانمودہ زور آں یک قادرے

சிலைகளின் இயலாமையை உலகத்திற்கு நிரூபித்துக் காட்டியவர். அனைத்து ஆற்றலுக்கும் உரிய இறைவனின் சக்தியை வெளிப்படுத்தியவர்.

تا نماند بے خبر از زور حق    بت ستاؤ بت پرست و بت گرے

அதனால் சிலைகளை பூஜிப்பவர்கள், வணங்குபவர்கள் மற்றும் செதுக்குபவர்கள் யாராயினும் இறைவனின் சக்தியை அறியாதவர்களாக இருக்க முடியாது.

عاشق صدق و سداد و راستی    دشمنِ کذب و فساد و ہر شرے

உண்மை, நேர்மை மற்றும் நீதியுடன் நடப்பவர்களைப் பாராட்டினார்கள். பொய், நேர்மையின்மை மற்றும் அனைத்து தீய விஷயங்களையும் வெறுத்தார்கள்.

خواجہ و مر عاجزاں را بندہ    بادشاہ و بے کساں را چاکرے

அவரே எஜமானர். இருப்பினும் பலவீனமானவர்க்கும் எளியவர்க்கும் சேவகனாய் இருந்தார்கள். அவரே மன்னர். இருப்பினும் எளியவர்களுக்கு சேவை புரிந்தார்கள்.

آں ترحمہا کہ خلق ازوے بدید    کس ندیدہ در جہاں از مادرے

மனிதகுலம் அவரிடம் இருந்து பெற்றுக் கொண்ட பரிவை தன் தாயிடம் இருந்து கூட ஒருபோதும் எவரும் பெறவில்லை.

از شرابِ شوق جاناں بیخودی    در سرش برخاک بنہادہ سرے

தன் நேசரின் அன்பெனும் பானத்தின் மயக்கத்தில் மூழ்கி அவனது வாசற்படியில் தன் சிரம் பணிந்தவர்.

روشنی از وے بہر قومے رسید    نورِ او رخشید بر ہر کشورے

அவரது பிரகாசம் ஒவ்வொரு சமுதாயத்தையும் அடைந்தது. அவரது ஒளி ஒவ்வொரு தேசத்தின் மீதும் பிரகாசித்தது.

آیت رحمٰن برائے ہر بصیر    حجت حق بہرِ ہر دیدہ ورے

நுண்ணறிவுள்ள ஒவ்வொருவருக்கும் அருளாளனாகிய இறைவனின் ஓர் அடையாளம் ஆவார். புரிதல் உள்ள ஒவ்வொருவருக்கும் அவர் ஓர் இறைசாட்சியாவார்.

ناتوانان را برحمت دستگیر    خستہ جاناں را بہ شفقت غمخورے

பலவீனருக்கும் ஆதரவற்றவருக்கும் அவர் கனிவுடன் உதவுகிறார். கதியற்றவர்களின் துக்கத்தில் அவர் பரிவுடன் பங்கு கொள்கிறார்.

حسن رویش بہ زماہ و آفتاب    خاک کویش بہ زمشک و عنبرے

அவரது அழகிய வதனம் சூரியனையும் சந்திரனையும் மிஞ்சுகிறது. அவரது இருப்பிடத்தில் உள்ள தூசியானது கஸ்தூரியை விடவும் புனுகை விடவும் அதிக வாசனை பொருந்தியது.

آفتاب و مہ چہ میماند بدو    در دلش از نور حق صد نیرے

நூறு சூரியனின் ஒளியைப் போன்ற தெய்வீக ஒளியை அவரது இதயம் பிரகாசிப்பதால் சூரியனையோ சந்திரனையோ எப்படி ஒத்திருப்பார் அவர்?

یک نظر بہتر زعمر جاودان    گرفتد کس را برآن خوش پیکرے

நித்தியமான ஒரு வாழ்வைக் காட்டிலும் நிகரற்ற அவரது அழகை ஒருமுறையேனும் பார்ப்பது சிறந்தது.

منکہ از حسنش ہمی دارم خبر    جان فشانم گر دہد دل دیگرے

அவரது வசீகரத்தினை அறிந்ததன் நிமித்தம் உடனே என் வாழ்வை அவருக்கு கொடுத்து விட்டேன். மற்றவர்களோ அவருக்கு தங்கள் இதயத்தை மட்டுமே காணிக்கை ஆக்குகின்றனர்.

یاد آن صورت مرا از خود برد    ہر زمان مستم کند از ساغرے

அவரது வதனத்தின் நினைவு என்னை பரவச நிலைக்குத் தள்ளுகின்றது. அவரது கோப்பையில் இருந்து பருகுதல் என்னை எக்காலத்திற்கும் மயங்க வைக்கின்றது.

می پریدم سوئے کوئے او مدام    من اگر میداشتم بال و پرے

எனக்கு மட்டும் இறக்கைகளோ சிறகுகளோ இருக்குமெனில் அவரது அவைக்கு நான் பறந்து கொண்டிருப்பேன்.

لالہ و ریحان چہ کار آید مرا    من سرے دارم باں روے وسرے

அல்லியும் துளசியும் எனக்கு என்ன பயன் தந்து விட முடியும்! ஏனெனில் நான் அந்த ஒருவருடனும் அவரது வதனத்துடனும் நேசத்தில் இருக்கின்றேன்.

خوبیٔ او دامن دل می کشد    موکشانم می برد زور آورے

அவரது ரூபம் என் இருதயத்தின் நாளங்களை இழுக்கின்றது. ஒரு பெரிய காந்தத்தைப் போல என்னைக் கவருகின்றது.

دیدہ ام کوہست نور دیدہ ہا    در اثر مہرش چو مہر انورے

கண்களின் ஒளி அவரே என நான் கண்டுள்ளேன். கதிரவனின் கதிர்களைப் போல அவரது அன்பு இதம் அளிக்கின்றது.

تافت آں روئے کزاں روسر نتافت    یافت آں درمان کہ بگزیدآں درے

அவர் புறமிருந்து திரும்பி விடாத முகம் ஒளிர்கின்றது. அவரது கதவண்டை காத்திருப்பவர் வெற்றியாளர்.

ہر کہ بے او زد قدم در بحرِ دین    کرد در اول قدم گم معبرے

அவர் இன்றி விசுவாசம் எனும் கடலில் படகோட்டி செல்ல முனைபவர் ஆரம்பத்திலேயே துறைமுகத்தை அடைய முடியாதவராய் இருக்கின்றார்.

امی و در علم و حکمت بے نظیر    زیں چہ باشد حجتی روشن ترے

அவர் கல்வி அறிவு இல்லாதவர். எனினும் அறிவிலும் ஞானத்திலும் நிறைந்தவர். இதை விட பெரிய மற்றும் உண்மையான சான்று உண்டோ?

آں شراب معرفت دادش خدا    کزشعاعش خیرہ شد ہر اخترے

அப்படிப்பட்ட அறிவின் ஊற்றை அவருக்கு இறைவன் வழங்கினான். தன் பிரகாசிக்கும் ஒளியினால் நட்சத்திரம் ஒவ்வொன்றும் மங்கலாகிப் போனது.

شدعیاں ازوے علی الوجہ الاتم    جوہر انسان کہ بود آں مضمرے

நீண்ட நெடுங்காலமாக மறைந்திருந்த மனித ஆற்றல் இறுதியில் அவர் மூலமாக வெளிப்பட்டது.

ختم شد برنفس پاکش ہر کمال　　لا جرم شد ختم ہر پیغمبرے

ஒவ்வொரு சிறப்பின் உச்சமும், தூய்மையான அவர் மூலமாகவே வெளிப்பட்டது. பிற நபிமார்கள் அனைவரின் ஆட்சியும் அவரிடத்தில் இறுதி அடைந்தன என்பதில் எந்த வியப்பும் இல்லை.

آفتاب ہر زمین و ہر زمان　　رہبر ہر اسود و ہر احمرے

ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொரு காலத்திற்குமான சூரியன் அவரே. கருப்பரோ வெள்ளையரோ அனைவருக்கும் வழிகாட்டி அவரே.

مجمع البحرین علم و معرفت　　جامع الاسمین ابرو خاورے

அறிவுத்திறன் மற்றும் உணர்ந்து கொள்ளுதலில் அவரே உருவமாக இருந்தார். மேலும் மேகம் மற்றும் சூரியனுடைய தன்மைகளை தன்னிடத்தே ஒருங்கே கொண்டிருந்தார்.

چشم من بسیار گردید و ندید　　چشمہ چون دین او صافی ترے

அவரது மார்க்கம் என்ற ஊற்றின் தூய்மையை விட சிறப்பானது ஒன்றை என் கண்கள் எத்தனை சுற்றி தேடியும் கண்டுபிடிக்கவில்லை.

سالکاں را نیست غیر از وے امام　　رہرواں را نیست جزوے رہبرے

தேடுகின்றவர்களுக்கு அவரைத் தவிர தலைவர் ஒருவர் இல்லை. உண்மையைத் தேடுபவர்களுக்கு அவரைத் தவிர வேறு வழிகாட்டி இல்லை.

جائے او جائے کہ طیر قدس را　　سوزد از انوار آں بال و پرے

அவரோ மிக உயர்ந்த அந்தஸ்தில் உள்ளார். அவரது ஒளியின் வீரியம் ஜிப்ரீலின் இறக்கைகளை கூட எரித்து விடக்கூடும்

آں خداوندش بداد آں شرع و دین　　کاں نگردد تا ابد متغیرے

இறைவன் அவருக்கு அருளியுள்ள மார்க்கமும் சட்டமும் என்றும் மாற்றத்திற்கு உள்ளாகாமல் நிலைத்து நிற்பவை.

تافت اول بر دیار تازیان　　تازیانش را شود درمان گرے

அவ்வொளி முதலில் அரேபியாவில் வீசியது. அங்கிருந்த அனைத்து தீமைகளையும் விக்கிர ஆராதனைகளையும் முடிவுறச் செய்தது. அம்மக்களிடம் ஆன்மிக சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தது.

بعد ازاں آن نور دین و شرع پاک　　شد محیط عالمے چوں چنبرے

அதன் பின் அம்மார்க்கம் மற்றும் தூய சட்டங்களின் ஒளியானது எல்லையற்ற வானத்தைப் போல முழு உலகையும் சூழ்ந்தது.

خلق را بخشید از حق کام جان　　وارہانیدہ ز کام اژدرے

மக்கள் தங்கள் வாழ்வின் நோக்கத்தை அடையும்படி இறைவனிடமிருந்து பெற்று, மக்களுக்கு வழங்கினார். மிருகத்தின் தாடைகளில் சிக்கியிருந்த அவர்களை மீட்டார்.

یک طرف حیران از و شاہان وقت　　یک طرف مبہوت ہر دانشورے

ஒருபுறம் மாபெரும் மன்னர்கள் வியப்பில் திகைக்க மறுபுறம் கல்வியாளரும் ஞானிகளும் வாயடைத்து ஊமை ஆகி விட்டனர்,

نے بعلمش کس رسید و نے بزور　　در شکستہ کبر ہر متکبرے

அவரது அறிவின் ஆழத்தையும் ஆற்றலையும் யாரும் அடைந்ததில்லை. கர்வம் கொண்டவர்களின் பெருமைகளை சிதறடித்தார்.

اوچہ میدارد بمدح کس نیاز　　مدح او خود فخر ہر مدحت گرے

எந்த ஒரு மனிதனின் போற்றுதலும் அவருக்கு தேவையில்லை. ஆனால் உண்மையில் அவரைப் புகழ்கின்றவர் தாமே பெருமை அடைகிறார்

ہست او در روضۂ قدس و جلال　　واز خیال مادحان بالاترے

அவரை புகழ்கின்றவரின் புரிதலுக்கு மேலான தூய்மை மாட்சிமை எனும் தோட்டங்களில் அவர் வசிக்கின்றார்.

اے خدا بروے سلام مارسان　　ہم برا خوانش زہر پیغمبرے

இறைவா! எங்களது பணிவான ஸலாத்தினை அன்னாருக்கும் அவரது சகோதரர்களான நபிமார்களுக்கும் தெரிவிப்பாயாக.

ہر رسولے آفتاب صدق بود　　ہر رسولے بود مہر انورے

ஒவ்வொரு நபியும் உண்மைக்கு வெளிச்சமானவர்கள். ஒவ்வொரு நபியும் ஒளிமிக்க சூரியனைப் போன்றவர்கள்.

ہر رسولے بود ظلّ دین پناہ　　ہر رسولے بود باغِ مثمرے

ஒவ்வொரு நபியும் இறைநம்பிக்கையின் தெய்வீக பாதுகாவலர். ஒவ்வொரு நபியும் கனிதரும் பழத்தோட்டமாய் இருக்கிறார்.

گر بدنیا نامدے ایں خیل پاک　　کار دین ماندے سراسر ابترے

இறைதூதுவர்கள் எனும் தூய கூட்டம் இல்லாமல் போயிருக்கும் எனில் விசுவாசத்தின் அனைத்து நோக்கங்களுமே நிறைவேறாது இருந்திருக்கும்.

ہر کہ شکر بعث شان نارد بجا　　ہست او آلائے حق را کافرے

அவர்களின் வருகைக்கு நன்றி செலுத்தாத எவரும் இறைவனின் நன்கொடைகளை மறுக்கிறார்.

آں ہمہ از یک صدف صد گوہراند　　متحد در ذات و اصل و گوہرے

அவர்கள் ஒரே சிப்பியில் தோன்றிய நூறு முத்துக்கள். அவர்கள் ஆளுமையிலும் தத்துவத்திலும் பிரகாசத்திலும் சமமானவர்கள்.

امتے ہرگز نبودہ در جہاں　　کاندراں نامد بوقتے منذرے

தக்க நேரத்தில் எச்சரிக்கையாளர்கள் வராத எந்த ஒரு மனிதக் கூட்டத்தாரும் ஒருபோதும் இருந்ததில்லை

اول آدم آخرِ شاں احمدست　　اے خنک آنکس کہ بیند آخرے

ஆதம் முதலானவர், அஹ்மது இறுதியானவர். இறுதியானவரை அறிந்து கொண்டவர் ஆசீர்வதிக்கப் -பட்டவர்.

انبیا روشن گہر ہستند لیک　　ہست احمد زان ہمہ روشن ترے

எல்லா நபிகளுமே ஒளி வீசும் மாணிக்கங்கள். அவற்றுள் எல்லாவற்றையும் விட அஹ்மது அதிக பிரகாசம் மிக்கவர்.

آن ہمہ کان معارف بودہ اند    ہر یکے از راہ مولیٰ مخبرے

ஒவ்வொரு நபியும் அறிவின் கருவூலம் ஆனவர். ஒவ்வொரு நபியும் இறைவனை நோக்கி வழிகாட்டி ஆவார்.

ہر کہ را علمے ز توحید حق ست    ہست اصل علمش از پیغمبرے

ஏகத்துவத்தின் அறிவு பெற்றவர் ஆயினும் அவர் ஏதேனும் ஒரு நபியின் வழியாகவே அதனைப் பெற்றிருப்பார்.

آن رسیدش از رہ تعلیم ہا    گو شود اکنوں زنخوت منکرے

அவர் அகங்காரத்தின் அடிப்படையில் அதை ஏற்றுக் கொள்ள மறுப்பினும் நிச்சயமாக நபிமார்களின் போதனைகள் மூலமாகவே அவர் அதை அறிந்திருப்பார்.

ہست قومے کج رو و ناپاک رائے    آنکہ زین پاکان ہمی پیچد سرے

தூய நபிமார்களை விட்டும் திரும்பிக் கொண்டவர்கள் இழப்புக்குரியவர்கள். மேலும் தூய்மையற்றவர்கள்.

دیدۂ شان روئے حق ہرگز ندید    بس سیہ کردند روئے دفترے

அவர் தம் கண்கள் உண்மையின் முகத்தைக் காணாத போதிலும் அவர்கள் அதைப் பற்றிய வாதங்களை அதிக அதிகமாக எழுதுகின்றனர்.

شور بختے ہائے بختِ شان بہ بین    ناز برچشم و گریزاں از خورے

அவர் தம் கண்களில் ஆணவத்துடன் சூரியனை விட்டும் திரும்பியதால் பேரிழந்தவர்கள்.

چشم گر بودے غنی از آفتاب    کس نبودے تیز بین چوں شپرے

கண்களுக்கு சூரியனின் தேவை இல்லை என்றால் வவ்வால்களே நுட்பமான கண்களை உடைய படைப்பாகும்.

ہر کہ کورست و براہش صد مغاک    وائے بروے گر ندارد رہبرے

எவர் ஒருவருக்கு கண் பார்வை இல்லையோ அவரின் பாதையில் குழிகளும் உள்ளனவோ ஒரு வழிகாட்டியை ஏற்றுக் கொள்ளாவிடில் அவருக்கு ஐயோ!

قوم دیگر را چنیں رائے رکیک    در نشستہ از جہالت در سرے

வேறு ஒரு சிலர் உள்ளனர். அவர்களும் அறியாமை நிமித்தம் ஏற்றுக் கொள்ள முடியாத நம்பிக்கையில் சிக்கி உழல்கின்றனர்.

کان خدا ملکے دگر اندر جہان    از دیارِ شان ندیدہ خوشترے

அவர்களது நம்பிக்கை யாதெனில் முழு உலகிலும் அவர்களின் தேசத்தை விட சிறப்பான வேறொரு தேசத்தை இறைவன் படைக்கவில்லை என்பதே.

ہمدگر روئے چو روئے خوب شان    نامدش مرغوب طبع و خاطرے

மேலும் அவர்கள் தங்கள் அழகான முகங்களை விட பிற முகங்கள் இறைவனை சந்தோஷப்படுத்துவதில்லை என்று நம்புகின்றனர்.

لاجرم از ابتدائش تا ابد    ماند و خواہد ماند آنجا بسترے

மேலும் இறைவன் அவர்களின் தேசத்திலேயே இருந்து வந்துள்ளான் என்றும் இனியும் அவ்வாறே இருப்பான் என்றும் நம்புகின்றனர்.

ملک دیگر گرچہ میرد در ضلال    مے نگردد زوگہے مستفسرے

பிற மக்கள் அறியாமை நிமித்தம் அழிந்து போவதைக் குறித்து இறைவன் துளியும் பொருட்படுத்துவதில்லை என்றும் நம்புகின்றனர்

داد مُریک ذرہ قومے را کتاب    ترک کردہ صد ہزاران معشرے

மேலும் இறைவன் தனது வேதத்தை ஒரு சிறிய தேசத்திற்கு மட்டும் வழங்கி விட்டு மற்ற எண்ணற்ற மக்களை வழிகாட்டுதல் இன்றி விட்டு விட்டான் என்று நம்புகின்றனர்.

چون بروز ابتدا تقسیم کرد    درمیانِ خلق از خیر وشرے

راستی در حصہ او شان فتاد    دیگراں را کذب شد آبشخورے

இறைவன் நன்மையையும் தீமையையும் அவனது படைப்புகளிடம் பகிர்ந்தபோது அவர்களுக்கு மட்டுமே உண்மையையும் மற்ற அத்தனை பேருக்கும் பொய்யையே வழங்கினான் என்று நம்புகின்றனர்.

قول شان این ست کاندر غیر شان    آمدہ صد کاذب و حیلت گرے

மற்ற தேசங்களுக்கு நூற்றுக்கணக்கான பொய்யர்களும் ஏமாற்றுக்காரகளுமே தோன்றினார்கள் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

لیک نامد نزد شاں یک نیزہم    آنکہ بودے از خدا دین گُسترے

மற்றவர்களுக்கு இறைசெய்தியை வழங்கக்கூடிய ஒரு நபியும் வரவில்லை என்றும் அவர்கள்கூறுகின்றனர்.

آنکہ ایشاں را نمودے راہ حق    درکشودے کذب ہر کذب آورے

இறைவனின் வழியைக் காட்டுவதற்கோ அல்லது ஒவ்வொரு பொய்யரின் பொய்யையும் வெளிப்படுத்துவற்கோ மற்றவர்களுக்கு ஒரு நபியும் வரவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.

تاشدے دادار را حجت تمام    برسر ہر مسلم و متنصرے

இறைவனுடைய வாதம் ஒவ்வொரு முஸ்லிம் மற்றும் ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் எதிராக முழுமை பெறும்படி அவ்வாறு உள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

الغرض نزدیک شان دادارِ پاک    ہست ظالم تر ز ہر ظالم ترے

சுருங்கக்கூறின், மேன்மைமிக்க இறைவன் அநியாயக்காளர்களிலும் அநியாயமானவன் என்று அவர்கள் கருதுகின்றனர்.

کو گزارد عالمے را در ضلال    مبتلا در پنجہ ہر ماکرے

ஏனெனில் அனைத்து தேசங்களையும் வழிகாட்டுதலின்றி சதி செய்யும் பொய் வாதிகளின் கருணையிலேயே விட்டு விட்டான். (என கருதுகின்றனர்).

خود ہمی دارد بیک قومے مدام    ہمچو شیدائے کسے میل و سرے

இம்மையை மட்டும் நேசிக்ககூடியவர்கள் போல இறைவன் ஒரே மதத்தை மட்டுமே நேசிக்கின்றான் என்றும் பிற மதங்களைக் குறித்து அவன் அக்கறையற்றவன் என்றும் அவர்கள் நம்புகின்றனர்.

اینچنیں پر حمق رائے ایں قوم را   حمق دیگر این کہ بروے فاخرے

இவ்வாறான அறிவற்ற நம்பிக்கைகளை மட்டும் அவர்கள் வைத்துக் கொள்ளவில்லை. மேலும் அத்தகைய நம்பிக்கையினிமித்தம் அவர்கள் பெருமை கொள்கின்றனர்.

عاقبت این رائے زشت و بد خیال   کرد ایشاں را عجب کور و کرے

இத்தகைய தீய சித்தாந்தம் மற்றும் தீய எண்ணங்களின் நிமித்தம் அவர்கள் விசித்திரமான ஒரு குருடர்களாகவும் ஊமைகளாகவும் ஆகி விட்டனர்.

چشم پوشیدند از صد چشمۂ   سرنگون گشتند بریک آخورے

நூற்றுக்கணக்கான தூய ஊற்றுகளைக் காணாதபடி தம் கண்களை மூடிக் கொண்டுள்ளனர். அசுத்தமான நீரைக் கொண்டுள்ள ஒரு குட்டையில் விழுந்து கிடக்கின்றனர்.

سخت ور زیدند کیں باانبیا   الامان از کینِ ہر متکبرے

நபிகள் நாயகத்தின் மீதான பகைமையினின்றும் அவர்கள் வெகுதூரம் சென்று விட்டனர். இறைவன் இத்தகைய இருமாப்பான மக்களின் பகைமையில் என்றும் எல்லோரையும் பாதுகாப்பானாக.

آنچہ کین شان بپاکان ثابت ست   از شیاطین کس ندارد باورے

ஷைத்தானிடம் இருந்து கூட இத்தகைய பகைமையை யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள். அத்தகைய பகைமையை இவர்கள் தூயவர்களின் மீது காட்டுகின்றனர்.

خربود اندر حماقت بے نظیر   لیکن ایشان را بہر موصد خرے

மூடத்தனத்திற்கு கழுதைக்கு இணை இல்லை என்பதைப் போல இவர்களோ மூடத்தனத்தில் கழுதையை விட மிக அதிகமாக மிஞ்சி விட்டனர்.

نے سرِ تحقیق دارند و ثبوت   نے زنند از صدق پا بر معبرے

இவர்கள் வினா உடையவர்களாகவோ ஆதாரப்பூர்வ –மாகவோ இருக்கும்படி கவலை கொள்வதில்லை. மேலும் இவர்கள் உண்மையை உண்மையான பிரயாசத்துடன் தேடுவதுமில்லை.

نے دوائے را شناسند از اثر   نے درختے را شناسند از برے

இந்நிலையில் அவர்கள் ஒரு தீர்வைக் கண்டு கொள்ளவில்லை. பழத்தின் மூலம் மரத்தை அறிந்து கொள்ளவும் அவர்களுக்கு தெரியவில்லை.

نے زکس پُرسند از روئے نیاز   نے بصرفِ فکرِ خود متفکرے

உண்மையை அறிந்து கொள்ளும் பொருட்டு அவர்கள் பிறரிடம் பணிவுடன் கேட்பதும் இல்லை. தங்களுடைய சொந்தமாக சீர்தூக்கிப் பார்க்கும் தன்மையையும் பயன்படுத்துவதில்லை.

نے بدل پروائے این تفتیش ہا   کزہمہ دین ہاکدا مین بہترے

எந்த மார்க்கம் பிற மார்க்கங்களை விட சிறந்தது என்று ஆராய்ந்து பார்ப்பதற்கும் அவர்களுக்கு ஆர்வம் இல்லை.

بریکے مائل عدو صدہزار   فارغ از فرق اقل و اکثرے

ஒரு விசுவாசத்திற்கு சார்பாகவும் மற்ற எல்லாவற்றிற்கும் எதிராகவும் உள்ளனர். சொற்பத்திற்கும் அநேகத்திற்கும் உள்ள வேறுபாட்டைப் பற்றி கவலையற்றுள்ளனர்.

نے بدل خوف خدائے کردگار   نے بخاطر بیم روزِ محشرے

அவர்கள் ஏக இறைவனுக்கு அஞ்சுவதுமில்லை. தீர்ப்பு நாளைக் குறித்தும் பயப்படவுமில்லை.

تیرہ جانان دیدہ ہا را دوختہ   سوختہ در کین وری چوں اژ درے

இந்த இருண்ட உள்ளத்தார்கள் தங்கள் கண்களை மூடிக் கொண்டுள்ளனர். மலைப்பாம்பைப் போல தங்களது கோபத்தில் எரிகின்றனர்.

دیدہ و دانستہ از حق قاصر اند   دل نہادہ در جہان غادرے

உண்மைக்கு எதிராக தங்கள் முதுகுகளை வேண்டுமென்றே திருப்புகின்றனர். பயங்கரமான இவ்வுலகின்பால் நேசம் கொண்டுள்ளனர்.

از برائے حق تراشیدہ زجہل   دائما درخانہ خود منبرے

தங்களது அறியாமையின் நிமித்தம் தங்களது வீடுகளையே தங்களது அறிவற்ற போதனைகளை அரங்கேற்றும் மேடைகளாக பிரஸ்தாபிக்கின்றனர்.

آن خدائے شان عجب باشد خدا   کو تغافل داشت از ہر کشورے

பிற ஒவ்வொரு தேசங்களையும் வேண்டுமென்றே உதாசீனப்படுத்தும் அவர்களது கடவுள் விசித்திரமானவர்.

بہر الہام آمدش دایم پسند   یک زبان یک خطہ کوتہ ترے

மேலும் அவர்களது இறைவன் தன் வெளிப்பாடுகளை அனுப்ப ஒரே ஒரு மொழியையும் ஒரு சிறு தேசத்தை மட்டுமே தேர்ந்தெடுத்துள்ளார்.

اینچنیں رائے کجا باشد درست   کے خرد گردد بسوئیش رہبرے

இத்தகைய நம்பிக்கைகளை எங்கனம் சரியானது எனக் கொள்ள முடியும். அறிவார்ந்த சிந்தனைகள் இப்படிப்பட்ட முடிவுகளுக்கு எவ்வாறு இட்டுச்செல்லும்.

کے گمان بد کند برنیکوان   آنکہ باشد نیک و نیکو محضرے

நேர்மையானவர்களுக்கு எதிராக இத்தகைய தீமையைக் கற்பிப்பதை. நல்லவராய்இருந்து, நல்லவர்களின் சூழலில் உள்ள எவரும் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்.

ماہ را گفتن کہ چیزے نیست این   ہست دشنامے نہ زین افزون ترے

நிலவை நோக்கி எந்தப் பயனும் அளிக்காத ஒன்று என்று அழைப்பதை விட நிலவுக்கு பெரிய இழிவை யாரும் ஏற்படுத்தி விட முடியாது.

کور گر گوئد کجا ہست آفتاب   میشود در کوری اش رسوا ترے

கண் தெரியாத நபர் சூரியன் இல்லை என்று கூறுவது அவரை கேலி செய்யப்படும் பொருட்டு இழுத்துச் செல்லக்கூடியதாகும்.

(தொடரும்...)







அல்லாஹ்வின் அருளால் இந்த வார இறுதியில் யு.கே ஜமாஅத்திற்கு தனது மஜ்லிஸே ஷூராவை நடத்துவதற்கான நல்வாய்ப்பு கிடைக்கின்றது. இத்துடன் கனடா மற்றும் பெல்ஜியம் ஆகிய ஜமாஅத்துகளும் இன்று ஷூராவை நடத்துகின்றன. நான் நம்பிக்கை வைக்கின்றேன். துஆவும் செய்கின்றேன். அல்லாஹ் தங்கள் அனைவருக்கும் ஷூராவின் மகத்துவமிக்க நோக்கங்களைப் பெறுவதற்கு உதவி புரிவானாக. நான் துஆ செய்கின்றேன். அல்லாஹ் எந்நேரமும் தொடர்ச்சியாக உங்கள் தரப்பிலிருந்து நீங்கள் ஷூரா பிரதிநிதி என்ற முறையில் எந்த ஆலோசனை வைத்தாலும் அது நீதியுடனும் இறையச்சத்துடனும் இருக்கும்; அதில் நீதி இறையச்சம் கலந்திருக்கும் என்று நான் நம்புகிறேன்.

உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். இந்த ஆண்டு நீங்கள் ஜமாஅத்தின் தேர்தல்களையும் நடத்துகின்றீர்கள். எனவே நினைவில் கொள்ளுங்கள். இதுதான் வழிகாட்டல்களாக இருக்கின்றன. உங்கள் எல்லா ஓட்டுகளையும் யாருக்காகப் பயன்படுத்த வேண்டும் என்றால், உண்மையான முறையில் பல்வேறு தொண்டுகளுக்கு உரிமையுடையவர்களாக இருக்கக்கூடியவர்களுக்காக நீங்கள் பயன்படுத்த வேண்டும். எப்பொழுதும் தனிப்பட்ட தொடர்பு, நட்பு ஆகியவற்றை உங்களுடைய அந்த தீர்ப்பு எனும் ஆற்றல் மீது மேலோங்க விடாதீர்கள். இந்த விஷயத்தை நினைவில் கொள்ளுங்கள். நம்முடைய ஒவ்வோர் அமலின் அடிப்படையும் இறையச்சமாகும்; இறையச்சமாக இருக்கவும் வேண்டும். இல்லையென்றால் இந்த ஷூராவின் உண்மையான நோக்கம் பிறகு வீணாகி விடும். அது நமக்கு கிடைக்கப் பெறாது. உண்மையில் அஹ்மதியாக இருப்பதற்கும் அதுதான் நோக்கமாகவும் இருக்கிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஷூரா எனும் இந்த அமைப்பை உருவாக்கியபோது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வஃபாத் ஆகி சில பத்து ஆண்டுகள் தான் கழிந்திருக்கும். எனவே ஆரம்பத்தில் எப்படிப்பட்ட சில உறுப்பினர்களும் ஷூராவில் இருந்தார்கள் என்றால், அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய சஹாபிகளாக இருந்தார்கள். இன்று அல்லாஹ்வின் அருளினால் பல அஹ்மதிகள் உலகில் இருக்கின்றார்கள். அவர்கள் அண்மையில் பைஅத் செய்திருக்கின்றார்கள். எனவே ஷூராவில் நீங்கள் ஒன்றுகூடியிருக்கின்றீர்கள் என்றால் ஜமாஅத்தில் புதிதாக இணைந்தவர்களும் வந்திருக்கின்றார்கள். எனவே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஷூராவுக்கான அமைப்பை உருவாக்கிய போது அன்னார் மிகவும் திருப்திகரமான வழிகாட்டல்களை நமக்கு வழங்கினார்கள். பல சொற்பொழிவுகள் மற்றும் உரைகள் மூலமாக நம் வரை ஷூராவின் அந்த நோக்கங்களை தெள்ளத் தெளிவாக எட்ட வைத்து விட்டார்கள். இந்த விஷயத்தையும் தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள். ஷூராவின் அந்தஸ்து மற்றும் அதன் ரூஹ் என்ன? இதற்கு என்ன முக்கியத்துவம் உள்ளது? இதன் நடவடிக்கைகள் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பது பற்றியும் சொல்லிக் கொடுத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் இந்த விலை மதிப்பற்ற சொற்பொழிவுகள் ஜமாஅத்தில் பல்வேறு நூல்கள் வடிவத்தில் நம் வரை வந்திருக்கின்றன. ஜமாஅத், நூல்களாக அவற்றை வெளியிட்டிருக்கின்றது. மஜ்லிஸே ஷூராவின் அனைத்து உறுப்பினர்களும், ஜமாஅத் பொறுப்பாளர்கள் அனைவரும் இந்த நூல்களை வாசிக்க வேண்டும். அப்போது தான் அவர்களுக்கு தமது பொறுப்பை பற்றிய உணர்வு ஏற்படும்.

பல நூல்கள் எப்படிப்பட்டவை என்றால் உருதுவிலும் இருக்கின்றன. சில ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்படவில்லை. ஆனால் மொழியாக்கம் செய்யச் செய்ய நீங்கள் அதனை படிக்க வேண்டும். உங்களில் மொழி அறிந்தவர்கள் எல்லா நூல்களையும் படிக்க வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களுடைய அந்த நூல்களின் வழிகாட்டல்களிலிருந்து பயன் பெற வேண்டும். நானும் ஷூராவின் அடிப்படை விதிகளை எடுத்துக் கூறுவேன். அது ஷூராவின் ஒவ்வோர் உறுப்பினர்களின் உள்ளத்திலும் பதிய வேண்டும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் ஒரு விஷயத்தை பலமுறை வெளிப்படுத்தி இருக்கின்றார்கள். அதாவது, மஜ்லிஸே ஷூராவின் மிகப்பெரும் குறிக்கோள் என்னவென்றால், அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதே குறிக்கோளாக இருக்க வேண்டும். ஒரு மனிதனுக்கு அசல் நோக்கம் அல்லாஹ்வைப் பெறுவதாக இருந்தால் அப்பொழுதுதான் அந்த மனிதனின் ஆலோசனைகள் உண்மை மற்றும் நீதியுடனும் தனிப்பட்ட எந்தவொரு விருப்பத்திற்கும் அப்பாற்பட்ட –தாகவும் இருக்கும். நீங்கள் அல்லாஹ்விடம் நேசத்தையும் வெளிப்படுத்த வேண்டும்; தியாகமும் செய்ய வேண்டும்.



ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: நாம் அனைவரும் நம்முடைய சொந்தத் தொடர்புகள், உறவுகள், ஆசைகள், எண்ணங்கள், கருத்துகள் ஆகியவற்றை அல்லாஹ் உடைய விருப்பத்திற்காக ஓரளவு தியாகம் செய்ய வேண்டியது வருகிறது. ஆனால் அன்னார் நமக்கு கூறியிருக்கின்றார்கள். சில விஷயங்கள் எப்படிப்பட்டவையென்றால் அல்லாஹ்வுடைய அன்புக்காக அவர்கள் தியாகம் செய்கிறார்கள்தான். ஆனால் எப்படி இருந்தாலும் பலவீனம் சில நேரத்தில் எஞ்சியிருந்து விடுகிறது. அன்னார் நமக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்கள். அல்லாஹ்வின் வழியில் இருந்து மனிதன் விலகிச் செல்லும்போது அல்லாஹ்வுடன் இருக்கக்கூடிய அந்தத் தொடர்பு முறிவதன் விளைவாக ஏற்படும் அந்த இழப்பு, சேதம் மிகப் பெரியதாகும். உலகில் அப்படிப்பட்ட மனிதருக்கு எந்தவொரு நிம்மதியும் கிடைக்க முடியாது. இன்னும் சொல்லப்போனால், அப்படிப்பட்டவரை மக்கள் மிகவும் விரும்பத்தகாதவராகப் பார்க்கிறார்கள். மேலும் ஆன்மிக அடிப்படையிலும், சரி பௌதிக அடிப்படையிலும் சரி, அப்படிப்பட்ட நபர் உண்மையை விட்டு முற்றிலும் துண்டிக்கப்பட்டு விடுகின்றார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இப்படிப்பட்ட மக்களைப் பற்றிக் கூறியிருக்கின்றார்கள். அவர்கள் மிகவும் பேரிழந்தவர்களாக, துர்பாக்கியசாலியாக இருக்கின்றார்கள். உலகில் மிகவும் அதிகமான பேரிழந்தவர்களில் ஒருவராக இருக்கிறார்கள். இவை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. நமது எல்லா வேலைகளிலும் எல்லா அமல்களிலும் எது நமது நோக்கமாக இருக்க வேண்டும் என்றால், அது அல்லாஹ்வின் மீதான நேசம் மற்றும் அவனது விருப்பத்தைப் பெறுவதாக இருக்க வேண்டும். இது நமது சிந்தனையில் எப்பொழுதும் நம் கண் முன்னாலேயே இருக்க வேண்டும். நாம் நம்முடைய சுயநலத்தை, அகந்தையை, நமது சொந்த ஆசையை ஒரு பக்கம் வைத்து விட வேண்டும். அதை விட்டு விலகியிருக்க வேண்டும். எல்லாப் பொறுப்பாளர்களும் ஷூராவின் ஒவ்வோர் உறுப்பினரும் அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவதாக இருக்க வேண்டும். நேசத்தைப் பெற வேண்டும் என்ற அந்த ஆசை உலகின் மற்ற ஆசைகளை விட மேலோங்கியதாக இருக்க வேண்டும். இப்படி நிகழ்ந்து விட்டால் உலகின் எந்தவொரு சமுதாயமும் எந்தவொரு இனமும் ஜமாஅத்திற்கு எதிராக நிற்கவே முடியாது.

இது சம்பந்தமாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் ஒருமுறை கூறினார்கள்: அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவது விருப்பத்தைப் பெறுவது சாதாரண விஷயம் ஒன்றும் கிடையாது. இதற்கு எப்படிப்பட்ட தியாகம் செய்ய வேண்டும் என்றால், வேறு எந்த விஷயத்திலும் அது போன்றதொரு தியாகத்தைச் செய்யவே முடியாது. மிகவும் சாதாரண முறையில் புரிவதற்காக சொல்ல வேண்டும் என்றால், அல்லாஹ்வின் வழியில் செய்யக்கூடிய அந்த தியாகம், உலகத்தில் இருக்கும் எல்லாத் தியாகங்களையும் விட பெரியதாக இருக்கும்.


ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மக்களுக்கு நாம் தியாகம் செய்ய வேண்டும் என்ற ஆசை மட்டும் இருப்பது போதாது. மாறாக அவர்களுக்கு நிய்யத் – உறுதியான எண்ணம் இருக்க வேண்டும். இந்தத் தியாகத்தின் அடிப்படை ஆசை என்ன இருக்கின்றது; இதற்கு எந்த அளவு முக்கியத்துவம் இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். மனிதனுக்கு கண்ணியம் மற்றும் ஆற்றல் கிடைக்க வேண்டும் என்று தியாகம் செய்கின்றான் என்றால், அதுபோன்ற பெயர் தாங்கிய குர்பானிக்கு எந்தவொரு பலனும் இல்லை. அது ஆன்மிக முன்னேற்றம் மற்றும் வெற்றிக்கு காரணமாக அமையாது. ஏனென்றால், அவற்றில் உலகம் கலந்துள்ளது. அல்லாஹ்வுடைய விருப்பத்தைப் பெறுவது நோக்கமாக இருப்பதில்லை. மேலும் உலகில் கண்ணியம் கிடைக்க வேண்டும் என்ற சொந்த ஆசைகள் இருக்கின்றன. அது கலப்பற்றதாக

இருப்பதில்லை. எனவே ஷூரா உறுப்பினர்கள் என்ற வகையில் இந்த விஷயத்தை உங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய தியாகங்கள் ஒருபோதும் உண்மையான விளைவுகளைப் பெற முடியாது. இப்படிப்பட்ட மக்கள் தமது வாழ்வைக் கழித்த பிறகு இறைவனைப் பெற முடியவில்லை; அவனது நேசத்தைப் பெற முடியவில்லை என்றால் என்ன பயன்? இப்படிப்பட்ட மக்கள் வெளிப்படையாகப் பொருள் தியாகம் செய்கின்றார்கள் என்றாலும் அல்லாஹ்வின் நேசத்தைப் பெற முடிவதில்லை.

இதே போன்று பல மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்றால் தங்களது கண்ணியம் மற்றும் கௌரவத்தை தியாகம் செய்து விடுகின்றார்கள். ஆனால் அல்லாஹ்வை விட்டு விலகி இருக்கின்றனர். அவர்களுக்கும் அல்லாஹ்வின் நெருக்கம் கிடைக்க முடியாது. சிலர் தங்களது பொருள் மற்றும் ஆன்மாவை அர்ப்பணித்து விடுகிறார்கள். ஆனால் அவர்கள் அல்லாஹ்வின் மடியில் இருப்பதற்குப் பதிலாக ஷைத்தானின் பிடியில் இருக்கின்றனர். சிலர் எப்படிப்பட்டவர்கள் என்றால், அவர்கள் கற்றுக் கொண்ட அந்த ஞானத்தை மற்றும் நேரத்தை தியாகம் செய்கின்றார்கள். இருந்தும் உலகின் பிடியில் சிக்கிக் கொள்கின்றனர். ஏனென்றால், அவர்களுடைய நோக்கம் அல்லாஹ்வுடைய விருப்பதைப் பெறுவதாக இருப்பதில்லை. மாறாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், இது தற்காலிக தியாகங்களாக இருக்கின்றன என்று கூறினார்கள்.

இது சம்பந்தமாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: அசல் தியாகம் அந்தக் குர்பானின் ரூஹ் – ஆன்மா ஆகும். மனிதன் முழுமையாக தனது ஆசைகளை, தான் என்ற அந்த அகந்தையை அல்லாஹ்வுக்காக அர்ப்பணித்து விட வேண்டும். ஏனென்றால் மனிதனின் ஆணவம், சொந்த ஆசைகள் மற்றும் அவனது மனயிச்சைகள் ஆகியவை இந்த வழியில் தடையாக இருக்கின்றன. ஒவ்வொரு விஷயத்திலும் ஆன்மா மேலோங்கி விடாத வரை, எல்லா நேரமும் அல்லாஹ்வின் விருப்பம் இல்லாத வரை அவரிடம் அந்த ஹிக்மத் பலவீனமான –தாக இருக்கின்றது. அல்லாஹ்வைப் பெறுவதற்கான வழியை விட்டு அவர் விலகிச் சென்று விடுகின்றார்.

வெளிப்படையாக மிகப் பெரிய தியாகமாக தென்படக்கூடிய ஒரு விஷயம்; ஆனால் அதன் அடிப்படை ஒன்றுமற்றதாக இருக்கும். ஏனென்றால் அவர்களுடைய நான் என்ற அந்த அகம்பாவம் அதன் துர்நாற்றம் ஒருபோதும் அழியாது. உண்மையில் அவர்கள் தங்களுடைய உயிர், நேரம் மற்றும் பொருளைத் தியாகம் செய்வது அல்லாஹ்வுக்காக இருப்பதில்லை. மாறாக, அவர்களது நோக்கம் என்னவாக இருக்கும் என்றால், அவர்களுக்கு வெளிப்படையாக உலகத்தில் செல்வாக்கு கிடைக்க வேண்டும். மக்கள் அவர்களுக்கு கண்ணியம் கொடுக்க வேண்டும் என்பதற்காக இருக்கின்றது.



ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: வெளிப்படையில் எவ்வாறு தென்படும் என்றால், அவர் அதிகமாக தியாகம் செய்கின்றார் என்று நினைப்போம். அவர் சமுதாயத்திற்காகவோ நாட்டிற்காகவோ தியாகம் செய்கின்றார் என்று நினைப்போம் அல்லது அவர் தனது ஆன்மாவுக்காக செய்கிறார் என்று நினைப்போம். ஆனால் அதன் பின்னணியைப் பார்க்கும் போது அவருடைய இயல்பு மட்டும்தான் இருக்கும். அவருடைய அகந்தை இருக்கும். நான் என்ற அந்த விஷயம் இருக்கும். தான் என்ற அந்த விஷயத்திற்கான தாகத்தைத் தணித்துக் கொள்வதற்காக செய்வார். அவரது சொந்த ஆசைகள், மனயிச்சைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், அவருடைய கருத்து எல்லாரது கருத்துகளையும் விட மேலோங்கி விடுவதற்காகவும், தனது சொந்த ஆசைகள் நிறைவேறுவதற் –காகவும் செய்கின்றார்.

ஆனால் அல்லாஹ் கூறுகின்றான்: எந்தத் தியாகம் அல்லாஹ் வரை நம்மைக் கொண்டு செல்கிறதோ அந்தத் தியாகம் எப்படிப்பட்டதென்றால், மனிதன் தன்னுடைய நஃப்ஸை அதன் ஆழத்தில் சென்று பார்க்கும்போது நாம் அல்லாஹ்வுக்காக செய்–கிறோமா என்று பார்க்க வேண்டும். மனிதன் அல்லாஹ்வுக்காக தனது பொருளைத் தியாகம் செய்வது, நேரத்தை தியாகம் செய்வது, அறிவைத் தியாகம் செய்வது அல்லது உயிரையும் கூட தியாகம் செய்து விடுவது, அது மட்டும் போதாது. மாறாக அல்லாஹ் என்ன விரும்புகிறான் என்றால், மனிதனின் எல்லாத் தியாகங்களும் அவனுடைய தான் என்ற அகந்தையை முடிவுக்குக் கொண்டு வருபவையாக இருக்க வேண்டும். அவனுடைய ஆன்மாவை எதிர்க்கக் கூடியவையாக இருக்க வேண்டும். ஆண்டு முழுவதும் இந்த விஷயங்களை அசைபோட்டுக் கொண்டே இருங்கள். உங்களைக் கணக்கிட்டுக் கொண்டே இருங்கள். அந்தத் தியாகங்களை, அந்த முயற்சிகளை செய்கின்றீர்களே? உண்மையிலேயே ஜமாஅத்திற்காகத்தான் செய்கின்றீர்களா? உண்மையில் கலப்பற்ற முறையில் அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவதற்காக இருக்கின்றதா? என்பதைப் பாருங்கள். அல்லது வெளிப்படையாக உங்களது பொறுப்பு என்பது பெயருக்காக, நீங்களும் ஷூரா உறுப்பினர் என்பதைக் காட்டிக் கொள்வதற்காக, ஒரு பிரதிநிதி என்பதைக்

காட்டிக் கொள்வதற்காக அல்லது வெளிப்படையாக ஜமாஅத்தில் உங்களுடைய Position என்ன? உங்களுக்கு என்ன அந்தஸ்து இருக்கின்றது என்பதைக் காட்டிக் கொள்வதற்காக செய்கின்றீர்களா? என்று பார்க்க வேண்டும். இதன் பலன் என்னவென்றால், அப்படிப்பட்ட Position –க்கு எந்தவொரு மதிப்பும் கிடையாது. அதற்கு எந்தத் தேவையும் கிடையாது. எந்தவொரு பலனும் கிடையாது.

பிறகு ஷூராவுடைய உறுப்பினர் என்பதிலும் அதுதான் இருக்கின்றது. இந்த விஷயத்தைக் கவனம் செலுத்தியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

மனிதன் தன்னுடைய இயல்பை முழுமையாக எதிர்த்து விடாத வரை ஒருபோதும் அல்லாஹ்வின் உண்மையான புரிதலைப் பெற முடியாது. ஒரு விதத்தில் அவன் ஷிர்க் செய்து கொண்டிருப்பான். வெளிப்படையான உலகின் முன் லாயிலாஹ இல்லல்லாஹ் – வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று சொல்வான். ஆனால் அவனது மனதில் நிறைய வேறுபாடு இருக்கின்றது. அவனது சிந்தனை வேறு ஏதாவது யோசித்துக் கொண்டிருக்கும். வெளிப்படையில் தன்னுடைய அந்தஸ்தை, செல்வாக்கை அதிகரிக்க வேண்டும் என்று யோசிப்பார். ஆக, அல்லாஹ்வுக்குப் பதிலாக அதை வணக்கத்திற்குரியதாக ஆக்கிக் கொள்கிறார். வாயால் அவர் என்ன கூறுகின்றார்? உண்மையில் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்று கூறுகின்றார். ஆனால் அவர் தன்னையே அதற்கு தகுதியானவராகக் கருதுகின்றார். தனக்குதான் உண்மையான கண்ணியம் கிடைக்க வேண்டும் என்று நினைக்கின்றார். அல்லாஹ்வுடன் அவர் தன்னையே இணையாக வைத்துக் கொள்கின்றார். இதில் தன்னுடைய தான் என்ற அகந்தையை அவர் கொல்வதில்லை. அதனை எரித்து சாம்பலாக்குவதில்லை. மாறாக என்ன நோக்கம் இருக்க வேண்டும் என்றால், மனிதன் தன்னுடைய விருப்பத்தை அல்லாஹ்வுடைய விருப்பத்திற்காக அர்ப்பணித்து விட வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: குர்பானி உடைய தியாகத்தின் எதிர்பார்ப்பு என்னவென்றால், மனிதன் அல்லாஹ்வுடன் செய்யக்கூடிய நேசத்தை நிபந்தனையின்றி செய்ய வேண்டும். அல்லாஹ்வுடைய கட்டளைகள் மற்றும் அவனுடைய விருப்பத்தின் கீழ் மட்டும் வந்து விட வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஏற்கனவே கூறியிருக்கின்றேன். பல மக்கள் இருக்கின்றார்கள். வெளிப்படையில் பெரும் பெரும் தியாகங்கள் எல்லாம் செய்வார்கள். அல்லது தியாகம் செய்கிறோம் என்று வாதம் புரிவார்கள். பொருள் தியாகமும் செய்வார்கள். வாழ்வையும் கூட அர்ப்பணித்து விடுகின்றார்கள். ஆனால் உண்மையில் அந்த தியாகங்களின் பின்னணியில் அவர்களுடைய இயல்பு இருக்கும். அவர்களுடைய நஃப்ஸ் இருக்கும். மனிதன் முழுமையான முறையில் தனக்கு இருக்கக்கூடிய அந்த ஆசைகளை தன்னுடைய அகந்தையை நான் என்ற அந்த விஷயத்தை விட்டு வெளியே வராத வரை அல்லாஹ்வின் மீதான உண்மையான அன்பு மற்றும் விருப்பம் நமக்கு கிடைக்க முடியாது. அல்லாஹ்வின் நேசம் அவனது திருப்தி நமக்கு கிடைக்க முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சஹாபா பெருமக்கள் நபி பெருமானார் (ஸல்) அவர்களுடன் இணைந்து மிகவும் வீரத்தோடு போர் புரிந்திருக்கின்றார்கள். ஒரு நபர் எந்த அளவு வீரத்தோடும் துணிச்சலோடும் போர் செய்தார் என்றால், மக்கள் அந்த நபரைப் புகழ்ந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அந்த நபரோ சொர்க்கத்திற்குச் செல்லக் கூடியவராக இருந்தார், நரகத்திற்குச் சென்று விட்டார் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்ன கூறிவிட்டார்கள் என்று சஹாபிகள் ஆச்சரியப்பட்டார்கள். இது எப்படி இருக்க முடியும்? இந்த நபர் இவ்வளவு வீரத்தோடு இவ்வளவு துணிச்சலோடு அதிக உத்வேகத்தோடு ஓர் உணர்ச்சியோடு முஸ்லிம்களுடன் ஜிஹாது செய்திருக்கின்றார்; போரில் கலந்திருக்கின்றார். அந்த நபர் எப்படி நரகத்திற்குச் சென்று விட்டார் என்று கேட்டார்கள். சஹாபிகள் இதற்கு என்ன காரணம்? என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் பணிவுடன் வினவினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சொற்கள் உண்மையை அடிப்படையாகக் கொண்டது என்பது சஹாபா பெருமக்களுக்கு தெரியும். அவர்கள் பார்த்தார்கள். அந்த நபர் மிக அதிகமாக காயமடைந்திருந்தபோது காயத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் இருந்தபோது அவர் ஈட்டியை வைத்து தன்னை குத்தி தற்கொலை செய்து கொண்டார். இது தற்கொலை தான். அவர் தன்னை மாய்த்துக் கொண்டார். இது மட்டுமல்லாமல் வஃபாத்திற்கு முன் அந்த நபர் கூறினார். அல்லாஹ்வுக்காக போர் புரியவில்லை. மாறாக, அவருடைய உள்ளத்தில் முன்னரே ஏற்கனவே பல பகைகள் இருந்தன. அந்தப் பகைகள் காரணமாக அவர் சென்றிருந்தார். அந்தப் பகைகளுக்கு பழிவாங்கிக் கொள்வதற்காக சென்றார். அவர் அல்லாஹ்வுக் –காகப் போர் புரியவில்லை.

ஆக, இஸ்லாம் நமக்கு என்ன போதனையை வழங்குகிறது என்றால், ஒரு நபர் தற்கொலை செய்து கொள்ளும் பொழுது அவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கவில்லை என்று பொருளாகும். அல்லாஹ்வின் கருணையை விட்டு தன்னை விலக்கிக் கொள்கின்றார். அப்படிப்பட்ட நபரின் தற்கொலை –யினால் அவர் ஷஹீது என்று அழைக்கப்பட முடியாது. உண்மையில் அவருடைய ஜிஹாதின் நோக்கம் அவரது ஆன்மா அளவில் மட்டும்தான் இருந்தது.

இவ்வாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சொற்கள் முழுக்க முழுக்க பொருத்தமானவையாக உண்மையானவையாக

நிரூபணமாயின. இது உண்மையில் அந்த எல்லா மக்களுக்காகவும் இருக்கிறது. நம் அனைவருக்காகவும் இருக்கின்றது. இதில் மிகப் பெரிய பாடம் இருக்கின்றது. நம்முடைய ஒவ்வொரு கருத்தும் ஒவ்வொரு ஆலோசனையும் அல்லாஹ்வின் மீதான அச்சம் மற்றும் அல்லாஹ்வுக்கு அஞ்சி நாம் வழங்க வேண்டும். அப்போதுதான் அல்லாஹ்வின் உண்மையான அருளை, பேரருளை, கருணையை நாம் பெற முடியும். மனிதனின் நஃப்ஸின் ஆசைகள் அதற்குப் பின்னால் இருந்தால், திரை மறைவில் இருந்தால், அவனது அகந்தை அதனை தூண்டி விடக்கூடியதாக இருந்தால் பிறகு கிடைக்க வேண்டியதாக இருந்த அல்லாஹ்வின் அந்த அருட்கொடைகள் மனிதனுக்கு கிடைக்காது.

எனவே ஷூரா உறுப்பினர்கள் என்ற வகையில், நீங்கள் பொறுப்பாளர்கள் என்ற வகையில் எல்லா விதமான சுயநலத்தை விட்டும் உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். எந்தவொரு விஷயமும் உங்களது கலப்பற்ற நிய்யத்தில் குறை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கக் கூடாது. அதிலிருந்து உங்களை நீங்கள் காப்பாற்றிக் கொள்ளுங்கள். பொறுப்பாளர் என்ற வகையில் உங்களில் பலர் எப்படிப்பட்டவர்களாக இருப்பீர்கள் என்றால், மீண்டும் ஒருமுறை நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்–பீர்கள் அல்லது முதல் முறை கூட தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். சமுதாய அளவில், நாடு அளவில் அல்லது உள்ளூர் அளவில் பொறுப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பீர்கள். உங்களில் ஒவ்வொருவரும் கடந்த மூன்று ஆண்டுகளை நீங்கள் பார்வையிட வேண்டும். எவ்வளவு தொண்டு செய்திருக்–கின்றீர்கள்? எந்த அளவு நீங்கள் உண்மையில் கலப்பற்ற முறையில் கலப்பற்ற நிய்யத்தில் வேலை செய்திருக்கின்றீர்கள். எவ்வளவு தொண்டுகள் உங்களுடன் தொடர்புடையதாக இருந்தது. உங்களை நீங்கள் மிகைப்படுத்திக் காட்டுவதற்காக வேலை செய்தீர்களா என்று பாருங்கள். நீங்கள் உங்களுடைய அகந்தை என்னும் அந்தப் பசியை அகற்றுவதற்காக உங்களது ஆணவத்தின் தாகத்தைத் தணித்துக் கொள்வதற்காக வேலை செய்தீர்கள் என்றால், பிறகு உலகிற்காக முயற்சி செய்தீர்கள் என்றால், நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் அந்த அருட்கொடைகள் உங்களுக்கு கிடைக்க முடியாது. அப்படிப்பட்ட தேர்தல் மூலம் நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றீர்கள். தேர்தல் சில இடங்களில் நடந்து விட்டது. சில இடங்களில் நடக்கவிருக்கின்றது. யாருடைய பெயருக்கு ஒப்புதல் வருமோ அவர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். உங்களது ஒவ்வொரு செயலையும் அல்லாஹ்வின் விருப்பத்திற்காகச் செய்ய வேண்டும். மற்றவர்களை சந்தோஷப்படுத்துவதற்காக செய்யக் கூடாது. மற்றவர்களுக்கு முன்னால் உங்களது குர்பானியை காட்டுவதற்காக செய்யக்கூடாது.

உதாரணமாக, தப்லீக் செயலர் என்ன நினைக்க வேண்டும் என்றால், அவருடைய திறமையின் காரணமாக பைஅத் இலக்கு கிடைக்கிறது என்று நினைக்கக் கூடாது. மால் செயலர், அவரது முயற்சியாலும் ஆற்றலாலும் தான் சந்தா வசூல் ஆகிறது என்று நினைக்கக் கூடாது. தஃலீம் செயலர் – கல்விச் செயலர், கல்வித்துறையின் மேம்பாடு அவருடைய உழைப்பினால் கிடைக்கிறது என்று நினைக்கக் கூடாது. உமூரே ஆமா செயலர் எனக்கு பல்வேறு பிரச்சனைகளை தீர்ப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. அதற்கான திறமை இருக்கின்றது. நான் வெற்றிகரமாக அந்த வேலைகளைச் செய்கிறேன் என்று நினைக்கக் கூடாது. மக்களுடன் என்னுடைய தொடர்பு நன்றாக இருக்கின்றது. அதனால் பிரச்சனை எல்லாம் என்னால் தீர்கிறது என்று நினைக்கக் கூடாது.

தர்பிய்யத் செயலர், அவருடைய சிந்தனை அவருடைய புரிதல் அவருடைய புத்திக்கூர்மை, திறமை ஆகியவை தான் ஒரு நல்ல சீர்திருத்தத்தை மாற்றத்தை ஏற்படுத்துகிறது. மக்கள் ஆன்மிக மற்றும் நல்லொழுக்க ரீதியில் முன்னேறி விட்டார்கள். தார்மீக முன்னேற்றம் ஏற்படுகிறது என்று நினைக்கக் கூடாது. நான் ஒரு சில துறைகளைப் பற்றி மட்டும்தான் உதாரணமாக சொன்னேன். ஆனால் இவை எல்லா துறைகளுக்கும் பொருந்தும். எல்லா துறையில் வேலை செய்பவர்களுக்கும் இது பொருந்தும். ஜமாஅத்தின் வெற்றி உங்களுடைய ஏதாவது ஒரு முயற்சியின் காரணமாக உங்களுடைய வீரத்தின் காரணமாக உங்களுடைய திறமையின் காரணமாக கிடைக்கிறது என்று நினைக்கக் கூடாது. மாறாக உண்மையில் நாம் உள்ளத்தில் அவ்வாறு நினைக்கிறோம் என்றால், அதாவது என்னவெல்லாம் கிடைத்ததோ அது உங்கள் தரப்பிலிருந்து கிடைத்தது என்று நினைத்தால் அது தவறாகும். நடந்ததெல்லாம் அல்லாஹ்வின் உதவியால் கிடைத்திருக்கின்றது. அவனது உதவி ஒத்தாசை இல்லாமல் எந்த வேலையும் நடக்க முடியாது என்று நினைக்க வேண்டும். அல்லாஹ் எவ்வாறு கருணை மழையைப் பொழிந்திருக்கின்றானோ அல்லாஹ்வுக்காக தியாகம் செய்ததன் விளைவாகத்தான் இருக்க முடியும். அதன் விளைவாக பெரிய மனங்கமழும் பழங்களை அல்லாஹ் வழங்குகின்றான். மேலும் ஜமாஅத்தின் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிரந்தரமான முன்னேற்றத்தை நம் கண்களால் பார்க்க முடியும். அதன் விளைவாக அல்லாஹ்வின் பார்வையில் உங்கள் அந்தஸ்தும் உயர்ந்து விடும். அதுதான் நமது நோக்கம் ஆகும். இல்லையென்றால், உங்களுடைய அகந்தை, ஆணவம் மேலோங்கி விட்டால் பிறகு முன்னேற்றத்திற்குப் பதிலாக நீங்கள் இழப்பு மற்றும் சீரழிவுக்குக் காரணமாகி விடுவீர்கள். ஜமாஅத்தின் ஒவ்வொரு பொறுப்பாளரும் இந்த நோக்கங்களை கண் முன் நிறுத்த வேண்டும்.

இந்த நோக்கங்களைப் பெறுவதற்குதான் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பினான். அதன் நோக்கம் என்னவென்றால், மனித குலத்தை அல்லாஹ்வுக்கு அருகில் கொண்டு வர வேண்டும். உலகில் உண்மையான ஏகத்துவத்தை நிலைநாட்ட வேண்டும்.

பிறகு மனித குலத்தின் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும். ஆனால் நம்முடைய உள்ளத்தில் ஏதாவது ஒரு வகையிலான சாதாரண அணுவளவாது அசுத்தமும் இருக்கின்றது என்றால் அல்லது கலப்பற்ற குறைபாடு இருக்கின்றது என்றால் பிறகு அல்லாஹ்வின் ஏகத்துவத்தை நம்மால் எப்படி நிறைவேற்ற முடியும்? எப்படி நாம் ஒரு சிலை வணங்கக்கூடிய ஒரு நபருக்கு அல்லாஹ்வுடைய ஏகத்துவத்தை நிலைநாட்ட வாய்ப்பு கிடைக்கும். இது முரண்பாடாக இருக்கின்றது. எனவே எப்பொழுது வரை 'நான்' என்பது மனிதனுடைய உள்ளத்தில் இருக்குமோ அப்பொழுது வரை மனிதனால் உண்மையான வெற்றியைப் பெற முடியாது. அதற்குப் பதிலாக நீங்கள் கலப்பற்ற தன்மையுடன் ஒவ்வொரு ஷிர்க்கிலிருந்தும் உங்களைக் காப்பாற்றிக் கொண்டால், அல்லாஹ்வுடன் முழுமையான நன்றியுணர்வை வெளிப்படுத்தினால் பிறகு அல்லாஹ்வின் அருள்களை நீங்கள் வாழ்வின் ஒவ்வொரு திருப்பத்திலும் பார்க்கக் கூடியவர்களாக இருப்பீர்கள். ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும்போதும் மழை போன்று பொழிவதைக் காண்பீர்கள். மேலும் அப்படிப்பட்ட மக்கள் தான் கிலாஃபத்திற்கு உண்மையாக உதவி செய்யக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். உங்களில் எவர்களுக்கெல்லாம் வேலைகள் கொடுக்கப்படுகின்றதோ நீங்கள் செயலராக இருந்தாலும் சரி அல்லது நாயிப் செயலராக இருந்தாலும் சரி அல்லது உங்களுக்கு வேறு ஏதேனும் வேலை வழங்கப்பட்டிருந்தாலும் சரி நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு டியூட்டியும் ஒவ்வொரு வேலையும், ஜமாஅத் தரப்பலிருந்து செய்யப்படும்போது காலத்தின் கலீஃபாவின் தரப்பலிருந்து வழங்கப்படும்போது அதற்காக முழு முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக முயற்சி செய்ய வேண்டும். உங்களுடைய சிந்தனை இந்தக் கோணத்தில் இருந்தால் பிறகு உங்களுடைய அந்த வெற்றி மற்றும் ஈடேற்றத்திற்குக் காரணமாக இருக்கும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் மிகவும் வேதனையுடன் கூறுகின்றேன். நாம் நமது சிந்தனையில் இந்த விஷயத்தை வைத்துக் கொள்ள வேண்டும். தனது இயல்பிற்கு எந்த முக்கியத்துவமும் இல்லை என்று மனிதன் நினைக்க வேண்டும். அப்பொழுதுவரை உண்மையான நெருக்கத்தைப் பெற வேண்டும். ஷூராவின் பொறுப்பாளர்கள் மற்றும் ஜமாஅத் பொறுப்பாளர்கள் உடைய அடிப்படையான நோக்கம் இதுதான். இந்தக் கோணத்தில் நீங்கள் முயற்சி செய்தீர்கள் என்றால், பிறகு ஜமாஅத்தில் ஆன்மிக மற்றும் நல்லொழுக்க முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டே செல்லும். நம்முடைய தப்லீக் பணிகளில் முயற்சிகளில் பரக்கத் ஏற்படும். ஜமாஅத்தின் பொருளாதாரத் தேவையை அல்லாஹ் நிறைவேற்று –வான். அத்துடன் நம்முடைய அடிப்படை பொறுப்புகளை மட்டும் நிறைவேற்றுவது போதுமானதல்ல. மாறாக அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு வாரிசாவதன் அவசியம் என்னவென்றால் நம்மால் இயன்ற எல்லா தியாகங்களையும் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். தொடர்ச்சியாக அதற்காக முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். இந்தத் திட்டத்தின்படி நீங்கள் தொண்டு செய்தீர்கள் என்றால் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து உங்களுக்கு அசாதாரணமான முறையில் அருள்கள் வழங்கப் –படும். அதை நீங்கள் பார்ப்பீர்கள். மேலும் நீங்கள் அல்லாஹ்வின் உதவியைப் பார்ப்பீர்கள். ஏனென்றால் அகம்பாவம் மற்றும் உள்ளப் பகைமை ஒரு மிகப் பெரிய தீமையாகும். உங்களை நீங்கள் இதிலிருந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் மீதான நேசத்திற்கான எதிர்பார்ப்பு என்னவென்றால், மனிதன் தனது அகம்பாவத்தை முற்றிலுமாக விட்டு விட வேண்டும் என்பதாகும். செகரட்டரி மால் ஆக இருக்கட்டும்; ரிஷ்தா நாத்தா செகரட்டரியாக இருக்கட்டும். தப்லீக் ஆக இருக்கட்டும். எந்தப் பொறுப்பாளராக இருந்தாலும் சரி அவருடைய துறையின் முன்னேற்றம் அவரால் ஏற்படுகிறது என்று நினைக்கக் கூடாது. அவரால் ஜமாஅத்திற்கு முன்னேற்றம் ஏற்படுகிறது. அவரது கருணை ஜமாஅத்தில் இருக்கின்றது என்று நினைக்கக் கூடாது. எந்தவொரு பொறுப்பாளருக்கும் இந்த சந்தேகம் சிறிதளவே இருந்தாலும் இது ஆணவம் ஆகும். நிச்சயமாக இதன் விளைவாக மனிதன் அல்லாஹ்வின் அருள்களிலிருந்து இழப்பிற்குரியவனாக ஆகி விடுகின்றான். (தொடரும்...)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

மனிதன் தன்னுடைய இயல்பை முழுமையாக எதிர்த்து விடாத வரை ஒருபோதும் அல்லாஹ்வின் உண்மையான புரிதலைப் பெற முடியாது. ஒரு விதத்தில் அவன் ஷிர்க் செய்து கொண்டிருப்பான். வெளிப்படையான உலகின் முன் லாயிலாஹ இல்லல்லாஹ் – வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று சொல்வான். ஆனால் அவனது மனதில் நிறைய வேறுபாடு இருக்கின்றது. அவனது சிந்தனை வேறு ஏதாவது யோசித்துக் கொண்டிருக்கும். வெளிப்படையில் தன்னுடைய அந்தஸ்தை, செல்வாக்கை அதிகரிக்க வேண்டும் என்று யோசிப்பார்.

ஆக, அல்லாஹ்வுக்குப் பதிலாக அதை வணக்கத்திற்குரிய –தாக ஆக்கிக் கொள்கிறார். வாயால் அவர் என்ன கூறுகின்றார்? உண்மையில் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்று கூறுகின்றார். ஆனால் அவர் தன்னையே அதற்கு தகுதியானவராகக் கருதுகின்றார். தனக்குதான் உண்மையான கண்ணியம் கிடைக்க வேண்டும் என்று நினைக்கின்றார். அல்லாஹ்வுடன் அவர் தன்னையே இணையாக வைத்துக் கொள்கின்றார். இதில் தன்னுடைய தான் என்ற அகந்தையை அவர் கொல்வதில்லை. அதனை எரித்து சாம்பலாக்குவதில்லை. மாறாக என்ன நோக்கம் இருக்க வேண்டும் என்றால், மனிதன் தன்னுடைய விருப்பத்தை அல்லாஹ்வுடைய விருப்பத்திற்காக அர்ப்பணித்து விட வேண்டும்.

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam